1050

சங்கீத வித்வான் S V. சுப்பையா பாகவதர்,
S. G. கிட்டப்பா, K B. சுந்தராம்பாள்,
ஸ்ரீ பால விநோத நாடக சபையார் இவர்களால் பாடிவரும்
குவலயமெங்கும் கொடிபெற்ற

கோவலன் டிராமா.

(இரண்டு பாகமும் அடங்கியது.)

போலி புத்தகங்களைக் கண்டு ஏமாறுமல்

16 AUG 1932

K. A. மதுரை முதலியார் பதிப்பித்ததாக பார்த்து வாங்கவும்.

சென்னை, முத்தியாலுபேட்டை, பாலசந்தச்சரபக்கவி.
[illegible] யாகராஜ செட்டியாரவர்களால் இயற்றப்பெற்று,
[illegible] முதலியாரவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

[illegible].] 1932. [விலை அணா 4.

O-,2MTC,K
N32
122340

சங்கீத பிரியர்களுக்கு ஓர் நல்விருந்து!

கிராம்போன் சங்கீத கீர்த்தனாம்ருதம்.

தற்காலம் கிராம்போனில் பாடிவரும் ஷண்முக வடிவு, எஸ். வி. சுப்பய்ய பாகவதர், டி. எம். காதர்பாஷா, எஸ். ஆர். கமலம், கோவிந்தராஜுலு, தம் பய்யா. மிஸ். கே. ரங்கநாயகி, மதுரை மிஸ். அ. சுந்தரம், டி. எஸ். ரங்கம்மாள், சேலம் அம் மாக்கண்ணு, திருவிடமருதூர் பவானி, தனகோடியும், சகோ தரியும், சுந்தரியும், வரலட்சுமி யும், கனகரத்தினமும், மாணிக்கமும் சேலம் கோதா வரி வி. சாரதாம்பாள், சிவக் கொழுந்து, வனஜாட்சி வீணை தனம், குமாரததிகள் பிரம்மஸ்ரீ என். எஸ். துரைசாமி அய்யர்,

நியமம் நடராஜ பாகவதர், எ. சாமிநாயுடு எஸ். ஜி. கிட்டப்பா, கே. பி. சுந்த ராம்பாள் இவர்களின் முக்கியமான பாடல் கிராம்போனில் பாடிய சிருங்கார பாடலும் பக்திரசபாடலும் மோகரசபாடலும் தோத்திர கீர்த்தனைகளும் அடங்கியது ஷை யார்கள் பெரிய சபைகளிலும் நாடகக்கொட்டகையிலும் ஆயி ரக்கணக்காகக் கூடியிருக்கும் ஜனங்களின் மனதை ரமிக்கச்செய்யும், சங்கீதத் தில் தேர்ந்து முக்கியமான பாடல்களை ஒருங்கு சேர்த்து அழகான பையிண்டு செய்து விலை சொற்பமாக ஏற்பாடு செய்துள்ளோம் இதில் பாகம் 1-க்கு 300- முக்கிய கீர்த்தனைகள் அடங்கியது.

இதன் விலை டினி தனிபாகம் 1-க்கு ரூபா	1	0	0
மூன்று பாகம் சேர்ந்த வால்யம் 1-க்கு	2	8	0
ஷை 6-பாகம் சேர்ந்த பெரிய கட்டடம் ரூபா	5	0	0

ஆர்மோனிய

சுரசாஹித்திய சங்கீத களஞ்சியம்.

இது சங்கீதம் கற்கவிரும்புகிற சிறுவர் சிறுமிகட்கும், சங்கீதத்தில் நன் றாய் தேர்ந்தவர்களுக்கும், சங்கீத உபாத்தியாயர்களுக்கும், ஆர்மோனியம், பிடில், வீணை, முதலிய வாத்தியங்களில் தேர்ந்தவர்களுக்கும், கற்றுக்கொண்டு வருபவர்களுக்கும் இன்றியமையாத புஸ்தகம். இதில் அரியபெரிய சங்கீத வித்வான்களான காரைக்குடி வீணை பிரதர்ஸ், பிரம்மஸ்ரீ அரிகேசவ நல்லூர் முத்தய்யாபாகவதர், தஞ்சாவூர் பிடில், கோவிந்தசாமி பிள்ளை, பரோடா சமஸ் தான வித்வான். பியாரேசாஹேப் இவர்கள் பாடிவரும் தீக்ஷிதரின் கீர்த்தனை, தியாகராஜய்யர் கீர்த்தனை, நந்தன் கீர்த்தனை, "ஜாவளி, தேவாரம், திருப்புகழ், தமிழ் பதங்கள் முதலிய பிரபல்லிய கச்சேரியில் பாடிவரும் சங்கீத வித்வான் கள் பாடல்களுக்குச் சுரதாளம்போட்டு அழகிய கிளேஸ்தாளில் உயர்ந்த பயிண்டு செய்து யிருக்கிறது. சொற்ப பிரதிகளே கைவசமிருக்கிறது.

விலை ரூபா. 1 8 0

ஷண்முகானந்த புத்தகசாலை, பார்க் டவுன், சென்னை.

ஸ்ரீ வேலுமயிலுந் துணே.

குவலயமெங்கும் கொடிபெற்ற

கோவலன் டிராமா.

இரண்டுபோகமும் அடங்கியது.

16 AUG 1932

V. A. தியாகராஜ செட்டியாரவர்களால் இயற்றப்பெற்று,

K. A. மதுரை முதலியாரவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் செய்தது.] 1932. [விலை அணு 4.

இந்நூலாசிரியர்.

சென்னை-சிந்தாதிரிப்பேட்டை,
[illegible]
V.A. தியாகராஜ செட்டியார்.

உ

ஸ்ரீ வேலுமயிலுந் துணை.

குவலயமெங்கும் கொடிபெற்ற

கோவலன் டிராமா.

(இரண்டுபாகமும் அடங்கியது.)

விநாயகர் காப்பு வெண்பா.

வணிகர் குலந்தனிலே வந்துதித்தக் கோவலனார்
கனிவுள்ள சர்த்திரத்தை கழறுதற்கு—பணிந்துதினம்
போற்றினேன் கஜமுகனே பொற்சதங்கைப் பாதா
ஏற்றினேன் வாதினனும் என்.

விநாயகர் துதி.

இராகம்-ஸ்ரீராகம். தாளம் ரூபகம்.

பல்லவி.

பாவலர் பணி வேத நாதரதே
பயின்ற சுடர் விரிந்த சுத (பா)

அனு பல்லவி.

பாரோர் புகழ்ந் தேற்றும் பாலன்
பக்தர்க் கருளும் குண தயாளன்
ஸ்ரீராகம நூற்குமூலன்
செப்பும்படி மிசையுனதரு ளொப்புகளணை யுனதிட
மொப்பக்கலை கற்பித்திடும் தொப்பைக்கண பதிவக்ரஹ (பா)

சரணங்கள்.

கஜ நாயக முக மூஷிக
காருண்ய கட லமு தாயக
நிஜபோஜக சுமு காயக
நித்தம்நின் மலவேதிப சுத்தப் பரிமளனேயுனே
நினைக்கு மெனே யனேத்து வரம்
கொடுக்க தடை யுனக் கெனவோ (பா)

ஸ்ரீ தரக்கந்த பாதநேமி
சிவகுகனரு ளழகர் சாமி
ஓதும்தியாக ராஜன்சொல்பூமி
உத்தம நற்குண முற்றவா வித்தக சிற்பாதத்துவ
வா சிவா ய வா நமோ நீ (பா)

சீன்:—1.] [இடம்:—கலியாண மண்டபம்.

கலியாண மண்டபத்தில் மாணுக்கன் செட்டியார், மாச்சோட்டான் செட்டியார், மதுரைமுத்து செட்டியார், மகாலிங்கஞ் செட்டியார் இன்னும் பல செட்டிமார்களும் அமர்ந்திருக்கின்றனர்.

கோவலனுக்கும் கர்னகைக்கும் விவாகம் நடக்கின்றது.

மாணு வ-ம்:—ஏங்காணும்? கலியாணம் என்னமோ வெகு ஆடம்பரத்துடன் நடந்தேரிவிட்டது. ஆயினும் இதிலின்னும் ஒருகுறை இருக்கின்றது.

மாச் வ-ம்:—அது என்ன குறை காணும்?

மாணு வ-ம்:—இல்லே! ஆட்டக்கச்சேரியின் குறைதான்.

மாச் வ-ம்:—அதற்கென்ன நடத்திவிட்டால் போச்சுது, அது தானு பெரிய காரியம், உனக்கு யாரேனும் நடனம் செய்பவர்கள் தெரியுமா?

மாணு வ-ம்:—நமது ஊரில்கூட ஒரு கச்சேரி நடந்தது அங்கே திருக்கடையூரிலிருக்கும் மாதவி என்னும் ஒரு பெண் நடனித்தாள், ஆஹா! என்னதான் அருமையாய் நடனஞ்செய்தாள் தெரியுமா?

மாச் வ-ம்:—அதற்கென்ன வரவழைத்து நடத்திவிடலாம்.

கணக்குப் பிள்ளையிடம் லிகிதம் கொடுத்தனுப்புகிறார்.

மாதவி வருகிருள்.

மாதவி இந்துஸ்தான்.

பா மில்னு ஐதோ மில்லேத்தே உசேநாரே முஜோக்சே
கியவும் ஜாக்கேச்சலே ஆயே தர்பாரே முஹம்மத்சே

கஜல்	அல்லா ஹக்கே பல்லேமே	வாதக்கே சிவாகியாஹா
பா	ஜோக்குச் முரீஜலேனுஹா	லேலுங்கா முஹம்மத்சே
க	ரோஸேபே முஹம்மக்சே	அம்னே ஜோக்குதா தேக்காஹா
பா	அல்லா ஹக்கே அவாஸே	ஆயீ கிஸீ ரும்மத்சே
க	ஐபாது சபாதுர் பத்தே	முகதாச் மரம்மத் அஹ
பா	மிட்டீ மஸே தோடீஸி	லாதே தரே ஹமத்சே
க	மாகத்சே பிரிஸ்டேதும்	சுப்பு ஜாப்பு சலே ஜாவோ
பா	சேடோகா தோகர் முச்கு	கஹை தூங்கா முஹம்மத்சே
க	ஐபாதேச பாலேச்சல்	உஸ்கூச் சேயே ஹாய்மத்மே
பா	மர்த்தாஹை தேரா	ஆஷக் கஹைதேனு முஹம்மத்சே
க	முஸ்தர்தேரி மர்கத்பே தயா	பாக்கிஸோ யாத ஆயீ
பா	நிக்லூங் காஜி கர்தாமே	தூட்டி வுலி மாகத்சே (மி)

மாத-வ-ம்:—செட்டிமார்களே வந்தனம்!

மாணு-வ-ம்:—ஏ மாதவி! கல்யாண், உனை நிர்தனிக்கும் பொருட்டு இங்கு அழைத்துள்ளோம் உனது மனவபிப்பிராயமென்ன?

மாத-வ-ம்:—சந்தோஷம்! நிர்தனிக்கத் தடையில்லை ஆயினும் கனந்தங்கிய தங்களிடத்தில் இவ்வெளியேனின் விண்ணப்பமொன்று இருக்கின்றது. அதைக்கேட்க. ....

மாச்-வ-ம்:—என்ன இது? ஒரு விண்ணப்பமொன்று இழுத்துக்கொண்டே போகின்றதே?

மாத-வ-ம்.—ஒன்றுமில்லை அதாவது.

ஆரடா ஆரடா ஆரடா என்ற மெட்டு.

என்னுடன் பிறந்த மாலை கையில்கொண்டு
இச்சபையில் நின்று வீசிடுவேன்
இங்கிருக்கு மன்னர் யார்மேல் விழுந்தாலும்
இன்பமுடன் யான் அழைத்துச் செல்வேன் ஏ

மாச்-வ-ம்:—என்ன? என்ன? ஆள் மீதில் விழுந்தால் தான் ஆளை அழைத்துக்கொண்டு போகின்றாய். அப்படி ஆளின்மீது விழாமல், எங்கள் வீட்டில் பின்புறத்திலிருக்கும் வைக்கோர்போரின்மீது விழுந்தால் அப்போது யாரை அழைத்துச்செல்வாய்?

மாமா-வ-ம்:—செட்டிபார்வாள்! தங்கள் வீட்டு வைக்கோல் பொதியின்மீது விழுந்தால் அதை எடுத்துச்செல்ல வேண்டியது தான், இல்லை! தப்பித்தவரி தங்கள் வீட்டு கஜானு பெட்டியின் மீது விழுந்து விட்டால் அப்பெட்டியை எடுத்துச் செல்லலாமல்லவோ?

மாச்-வ-ம்:—சரிதான்! காரியம் நன்ருகவே தானிருக்கின்றது? நீங்கள் நடத்தும் சதுர் கச்சேரிக்காக, எங்கள் வீட்டிலிருக்கும் கஜனுபெட்டி உங்கள் வீட்டில் வந்து இரங்கவேண்டுமோ? சரிதான் கச்சேரியும் வேண்டாம், உங்கள் கால க்ஷேபமும் வேண்டாம், போமையா போம்.

எழுந்திருந்து அடிக்க நோக்கிக்கொண்டு ஓடுகிருர் இதற்குள் மகாலிங்கஞ் செட்டியார் எழுந்திருந்து.

மகா-வ-ம்:—ஆமாம், நட்டுவஞரே! கஜானுபெட்டி மீது விழுந்தால்தான் அதை எடுத்து செல்குவீர், அதை விட்டு எங்கள் வீட்டு புழக்கடையில் போட்டு இருக்கின்றதே அந்த மாட்டுக்கொட்டகை மீது விழுந்து விட்டால் அப்போது மாட்டை அழைத்து செல்வீரா? அல்லது மாட்டுக்கொட்டகையை அடியோடு பேர்த்து எடுத்து செல்வீரா?

மாமா-வ-ம்—மாட்டுடன் மாட்டுக் கொட்டகையை பேர்த்து எடுத்துச்செல்ல வேண்டியதுதான்.

மாகா-வ-ம்:—ஐயையோ! மாட்டை வாங்கி இன்னும் இரண்டு நாள் கூட சரியாக ஆகவில்லேயே? இதற்குள்ளாக மாட்டையெப்படி உங்களுடன் அனுப்புவேன்? சரிதான், இவர்கள் வீட்டு கலியாணத்திற்கு வந்த இலாபமா இது? சரி சதுர் நடத்துங்கள், மாலே விழும்போது பார்த்துக்கொள்ளலாம்.

மாமா-வ-ம்:—சரிதான், ஏ குட்டி! காரியம் நடக்கட்டும்.

மாதவி நடனம் செய்கிருள்

மாதவி டான்ஸ் இந்துஸ்தான்.

பா படிலம்பி சபருக்கு ஸையாங் லாயோரே படி

எடுப்பு.

ஸையாங் லாயோரே பியாரே கையோரே படி
கஜல் சேட்லாயே லட்டு தேவர்லாயே பேடா
பா ஸையாங் லாயோரே படிலம்பி சபருக்கு ஸை
கஜல் லட்டு பிதூட்டு கையோ பேடாபி கருகையோ
பா மஜாகரோரே சாடே பாரா பசுக்கு மஜாகரோரே படி

(மாதவி பாடிக்கொண்டே மாலேயை எரிகின்ருள்)

மாத-வ-ம் :—மாமா! மாலே யார் கழுத்தில் விழுந்தது பார்த்து வாருங்கள்.

மாமா-வ-ம்:—குட்டி! எனக்கு கண் கொஞ்சம் பழுதாயிருக்கின்றது ஆதலால் நீயே சென்று பார்த்துவா!

மாத-வ-ம்:—சரிதான் மாமா!

மாதவி செட்டிமார்கள் அருகில் வந்து நின்று
மாதவி சிட்டா கண்ணி.

என்மாலே உங்கள் கழுத்தில் இன்பமுடன் விழுந்துதா
என்னை மோசம் செய்திடாமல் எழுந்து வரலாகாதா (எ)

இதற்குள் செட்டிமார்கள் பலரும் பார்த்து மாலே இல்லே
யென்று தெரிந்துவிட, கடைசியில் மாலே கோவலன்
கழுத்திலிருக்கக் கண்டு மாதவி திடுக்கிட்டு.

மாதவி கலித்துறை இராகம்-செஞ்சுருட்டி

மாமதனே தெய்வபதி அரசாளும் இந்திரனே
வெண்ணி லாவை
நேமமுடன் சிரமதனில் அணிந்திட்ட நிர்மலனே
வீணை ஏந்தும்
நாமகளின் கொழுனனெனும் நான்முகனே நந்தகோப
னென விளங்கும்
சாமளனே தென்பழனி தேசிகன்தான் இவ்வுருவாய்
அமர்ந்திட் டானே

மாதவி-வ-ம்:—ஆஹா! என்ன அழகு! எத்தகைய சிங்காரம்! எவ்வளவு முகவசீகரத்துடன் இக்கலியான மண்டபத்திடமாக அமர்ந்திருக்கின்றார்? இவர்யாராயிருக்கலாம்? சாக்ஷாத்ஜெகதீசனே? அல்லது அக்கழுகுமலே கந்தனே? இல்லே, நம்மைப் பிறப்பித்த அந்நான்முகக்கடவுளோ ஒருவேளே அங்கஜவேள் எனப்புகலும், அம்மன்மதனே என்னை வரிக்கும் பொருட்டு இவ்விடத்தில் இவ்விதம் அவதரித்தனரோ? ஆஹா! புணர்ந்தாலும் இத்தகைய புண்ணிய புருடனை யல்லவோ புணருதல் வேண்டும்? மாமா! மாலேயைப் பார்த்தனேயா? மாப்பிள்ளே கழுத்திலேயே விழுந்திருக்கிறது.

மாமா-வ-ம்:—பேஷ்! பேஷ்! குட்டி, பிடித்தாலும் சரியான புளிய மரத்தை யல்லவோ பிடித்தாய்? என்னமோ எம்மா நீங்களிருவரும் சுகமாயிருந்தால் இப்பொழுங்கண்ணால் பார்ப்பேன்? குட்டி அதிருக்கட்டும் என்னமோ இன்றைக்குத்தான் இவரிருக்கிறாரென்று ஆனமட்டும் தின்று தீர்த்துவிடப் போகிறே? செட்டியாரை வசப்படுத்தி பொருள்களை பறிப்பதிலேயே கண்ணேக்கமாக இரு தெரிகின்றதா? இந்த ஆடம்பரத்திலே என்னை மறந்துவிடப்போகிறே?

மாதவி-வ-ம்.—அப்படியெல்லாம் மறக்கமாட்டேன் மாமா.

(மாதவி கோவலனருகில் சென்று)

எகுந்தேன்னுடன் வாரும் என்ற மெட்டு.

மா. என்னுடன் வருவீரே பிராண நாதரே
கோ. எங்கழைக்கின்று யெந்தனை ஏந்திழையரே
மா. எந்தனி னூருக்கு போகவழைக்கின்றேன்
கோ. உந்தனி னூருக்கு நானேன் வருவது
மா. கண்ணாளரே என் மனையி லிருப்பீரே
கோ. உன்வீட்டில் யானிருக்க வேலை என்னடி
மா. இதையரியாதோர் புவியிலுளரோ எழுந்துவிரைவில்வருவீரே
கோ. மம்மதை கொண்டேனே மாதே அழைக்காதே
செல்லடி செல்லடி
சரியல்ல அழைப்பது செல்லடி செல்

கோ-வ-ம்: —அடிச்சண்டாளி! கலியாணத்தில் கருத்தாய்பேசி மயக்கவந்த கணிகைகுல காதகியே, உனது குலவிருத்தாந்தங்களெல்லாம் எனக்குத்தெரியாதென நீ நினைத்தனையோ?

மாதவி-வ-ம்:—நாதா! என்சேதி தங்களுக்கு என்ன தெரியும்?

கோ-வ-ம்:—அப்படி கேள் தெரிவிக்கின்றேன்,

கோவலன் கலித்துறை இராகம் பைரவி.

துட்டளவு சுகங்கொடுத்து வருகிறவர் தனைமயக்கி துடுக்குபேசி
அட்டமத்து சனியனது துடர்வதுபோல் பிணியேற்றி அவர்க்குவிட்டு
மட்டுமித மின்றிபொருள் மனையாட்டி தாலிமுதல் வழங்கவாங்கும்
வட்டகுய கணிகைகுல மாதருடனே யான் வருகலாமோ.

கோ-வ-ம்:—அடி பேதாய்! இன்னும் கேள் தெரிவிக்கின்றேன்.

சரசக்கார மாமா என்ற மெட்டு.

ஊரை மயக்கும் தாசி அவரை
விரும்பினோர் பர தேசி வெகு
பேரை கெடுத்த தோஷி இதில்
பிசகில்லை நீ ஆலோசி மிக
பேதமையுள்ள வாலிபர்களை வேதனையுறவே வருத்திடும் (ஊ)

விருத்தம்.

காலையிலே பார்த்தால் செத்தபிணம்போல் முகமிருக்கும்
சாலையோரத்திலும் சந்திலும்பொந்திலும் சாதுர்யமாய் நடந்து
வாலவயதுள்ளோரை மிரட்டியே பார்வையால் அழைத்துச்சென்று
சூலையுடன் அறையாப்பு கண்டமாலையுடன் சுலபத்தில்தருகுவாளே.

ஷை பாட்டுத்தொடர்.

சென்ட்டு அத்தர்	மேலே	பூசி
சித்திரப் பதுமை	போலே	இவளை
கண்டபேர் காதலித்	தாலே	கையை
காட்டி யழைத்திடு	வாளே	(ஷை)

விருத்தம்.

மையலை யூட்டியே மார்மீதும் தோள்மீதும்
மாதிவள் விழுவாளேயோ
கைதனி லுள்ளதோர் காசுதனை பிடுங்கவே
கலவியை யளிப்பாளேயோ
ஐதயாலாள் மோகத்தில் சிக்கினல் உள்ளபொருள்
தனைக்கொள்ளை யிடுவாளேயோ
நொய்யவே அணிதிருக்கும் ஆடையும் உரிந்துமே
நிர்வாணமாய் அனுப்புவாளே.

ஷை பாட்டுத்தொடர்.

தலைமயிர் நரைத்	தாலும்	கருந்
தைலம் பூசிமென்	மேலும்	யாரும்
நிலை குலைந்திட	நாளும்	சிவி
நிற்பாள் ரம்பைபோல்	கேளும்	(ஷை)

விருத்தம்.

வேலைக்கோர் புருடனையும் வெறுக்காமல் மோகங்கொள்ள
சேலைக்கோர் புருடனையும் சென்ட்டுமை சாந்தும் கில்ட்டு
ஓலைக்கோர் புருடனையும் ஊரதனை மயக்கமலர்
மாலைக்கோர் புருடனையும் எண்ணவென்றால் மதிப்பில்லையே.

ஷை பாட்டுத்தொடர்.

பிராந்தி உஸ்கிஜின்	குடிப்பாள்	அவள்
பீடி சிகரேட்	பிடிப்பாள்	நல்ல
கிராம்போன் சங்கீதம்	படிப்பாள்	அன்னக்
கிளிபோல் திரேகத்தை	யொடிப்பாள்	(ஷை)

விருத்தம்.

தாடையது பள்ளமே விழுந்தாலும் கனமாக
தேய்ப்பார்கள் மஞ்சள் தனையே
வாடையாய் பாதகிகள் பல்லெல்லாம் விழுந்தாலும்
வேறுதந்தம் கட்டிக்கொள்வார்

ஜாடைகாட்டு வாளிவள்மேல் படைபடையாக இருக்குமே
தான் அழுக்கு கற்றாழை நாற்றம்
நாடெல்லாம் இரவும்பகல் நங்கையிவள் கழுதைபோல்
நாடியே திரிவாளையோ.

ஷை பாட்டுத்தோடர்.

ஆண்டுக்கு ஒரு தடவை தண்ணீ
ரதனைக்காணுமே புடவை தினம்
வீண் டம்பமாக கதவை ஒஞ்
சரித்து வைப்பாளே விதவை (ஊ)

விருத்தம்.

கண்ணாடி கற்களை பித்தளை நகைகளில்
பதியவைத்து மாட்டிக்கொள்வாள்
கண்களில் மைதீட்டி கனரம்பை போலவே
கதவருகில் நின்றிருப்பாள்
செண்டுபோல் ஸ்தனம்காண துணிதனை பந்துபோல்
சுருட்டியே கட்டிவைப்பாள்
அண்டையில் கைவைத்து அவிழ்த்திட விடமாட்டாள்
அனியாயக் காரிதானே.

ஷை பாட்டுத்தோடர்.

பாதகந்தரும் பழியே தேடும்
பரத்தையர்களின் வழியே சென்றால்
தோதுள்ள நரக் குழியே சொன்னேன்
தியாகராஜனின் மொழியே (ஊ)

கோ-வ-ம்:—வியாதியே ஒருருவாகத் திரண்டு வந்த வேசியே! பொருள் தந்தவரை போகித்து பொல்லாப் பிணிகளை யளித்துப் பூவில் பெருந்துயருறச்செய்யும் பூதகியே! இனியவாவது உனது சூழல்களனைத்தும் நன்குணர்ந்துக் கொண்டனை யல்லவோ? ஒழுங்காகச் சென்றுவிடு.

மாத வ-ம்:—நாதா! இதுதானா? இதைவிட அதிகமான துர்ச் செய்கைகளிலெல்லாம் பிரவேசிக்கும் சண்டாளிகள் இப்பூவில் அனேகருண்டு, ஆனால் யான் மாத்திரம் அத்தகையவளென மதியாதீர், ஆதலால்,

தாயே நமஸ்காரம் என்ற மெட்டு.

மா. நாதனேநீர் வாரும் நங்கையராசைத்தீரும்
வாது ஏனோ கூறும் வஞ்சியரைக் கண்பாரும்
வாகுடன் சேரும் வாகுடன் சேரும்
வடிவழகா உனது சுக போகத்தைத் தாரும் (நா)

கோ. சிச்சீ துஷ்டிபோடி சிறப்பாய் வந்தாயோடி
பேச்சு சொல்லாதோடி பேயே எந்தனைநாடி
பக்ஷமுடன் தேடி பக்ஷமுடன் தேடி
பாசாங்குசெய் தேசினாலும் வருகேன்ணைடி

மாதவி வ-ம்:—நாதா! வீணில் இவ்விதமெல்லாம் தூஷியாதீர்?

கோவலன் வ-ம்:—அடி பேதாய்! இவ்வளவு நேரம்வரை உனை விட்டுவைத்தேன், இனி எனது காவலர்களால் அடித்துத் துரத்து வேன் ஜாக்கிறதை.

மாதவி வ-ம்:—நாதா! யான் செல்ல வேண்டுமா? ஆனல்,

ஏனே எனை எழுப்பலானய் மடமானே என்றமெட்டு.

மா. நானெறிந்த மாலைதன்னை தந்திடும் சீமானே
நங்கையாள் பெற்று இப்போதே நாடிச்செல்கு வேனே
கோ. மாலை ஏது மாதரசே மகிழ்ந்துரைப்பாய் நீயே
மாக்ஷியுடனே தருவேன் மர்மமரிவாயே
மா. என்மாலை உன் கழுத்தில் இருக்குதோ பாரும்
ஏந்தலரே இக்ஷணம் எடுத்து அதைத்தாரும்
கோ. ஓஹோ இதேது மாலை என்கழுத்தில் மாதே
ஓடிப்போவாய் யான்தருவேன் உண்மையா யிப்போதே

கோ வ-ம்:—ஹா! இதென்ன ஆச்சரியம்! இம்மாலை எப்படி என் கழுத்தில் விழுந்ததோ தெரியவில்லையே? (மாலையை கழற்றிப் பார்த்து பிறகு கத்தியாலருத்துப்பார்த்து) ஹா! என்னசெய்வேன்?

கழுத்தில் விழுந்தமாலை என்றமெட்டு.

கழுத்தில் மாலைவிழுந்த காரணமரிகிலேன்
கங்காதரனே இனி என்செய்வேன்
கத்தியினலும் அருத்தேன் கனரம்பத்தால் சிதைத்தேன்
கழலவில்லை மாலையான் எங்குய்வேன்
கருத்துடன் தாலிதரிக்கும் வேளைதனிலே
காதகியான பொல்லாத தாசியினலே
கலங்கிவருந்த லாகினேன் இதை
கண்டிருந்தும் உன்மனது சம்மதமாமோ க

கோவலன் விருத்தம். இராகம்-கீர்வாணி.

மாதுதான் விட்டெறிந்த மாலையோ அகலவில்லை
மாதுதான் போகாளேயோ மாலையைத் தருகாவிட்டால்
மாதுதான் காதல்பேசி மாலையும் கேட்கின்றாளே
மாதுதான் ஏகுமாறு மகிழ்ந்தருள் புரிவாயீசா.

கோ வ-ம்:—ஏ! பெண்மணி! உன் மாலையைக் கழற்றித்தரும் பொருட்டு எவ்வளவோ முயற்சித்தும் ஒன்றும் பயன்படவில்லை. ஆதலால், இதைத்தவிர்த்து நீ வேறு என்ன தெரிவித்தபோதும் உட்படுகிறேன்?

என்னுடனே வாரும் என்றமெட்டு.

மா. மாலைதனைத்தாரும் அல்லால் மன்னவரேவாரும்—இல்லை
மைத்துனரே யான் தருகின்றதாம்பூலம் தன்னை தின்பீர்நீரும் (மா)

கோ. வருவதற்கும் மானே மாலை தருவதற்கும்தேனே—மனம்
வந்திடவில்லையே சுந்தரி தாம்பூலம் தந்திடில்தின்பேனே (வ)

மா. ஆனல்சரிதுரையே-நல்ல-அடைக்காய் சுருள்முறையே—இந்த
ஆரணங்குதந்தேன்மாரனே இவ்வேளை அன்பாய்தீர்ப்பீர்குறையே

கோ வ-ம்:--ஹா! நமக்கென்ன மதியீனம்? அழகில் ஒப்பற்ற கீர்த்தி வாய்ந்த இம்மாதரசை நாம் சற்றேனும் கவனியாது பலவித மாக தூஷித்தோமே? தவிரவும், இவள் நம்மரிகிலிருந்தாலே போதுமே? இவளைவிட வீடேது? நாடேது? பந்துஜன வர்க்கமேது? மாலையிட்ட மங்கையேது? மாதா பிதாக்களேது? ஆஹா! நாம் இவளை தூஷித்ததைப்பற்றியாவது கொஞ்சம் மன்னிப்பு கேட்டுக் கொள்ளலாமா? அடி கண்மணி!

(கோவலன் மாதவியின் அருகில்வர அதைக்கண்ட மாதவி)

மன்னவாவுன் மலரடிக்கே என்றமெட்டு.

மா. சென்றுவாரேன் சபையோரேயான்
தருணமே விடை தயவுடனளிப்பீர்

கோ. இன்று யெனைப் பிரிந்திடாது நீ சேர்

மா. என்னைப்பலவாறு தூஷித்தீரே

கோ. கண்மணியான் உனது மகிமை
கவனியாமலே கூறினேன் தோகையரே

மா. மன்னவா சரி சரி வாரும்

கோ. பெண்ணே இதோ வருவேன் கண் பாரும்

மா. திண்ணமுடன் துடர்ந்து வருவீர் தினமே இத்ததியே செ

பொது வ-ம்:—மாதவியுடன் கோவலன் செல்ல அதைக்கண்ட அவனது பந்துக்கள் மாதவியைத் துரத்திவிட்டு கோவலனை ஓர் அறையில் பூட்டிவிட ஓட்டை பிரித்துக்கொண்டு வெளியில் வந்து மாதவியை தேடிவருகிறான்.

சீன் :—2] [இடம் :—திருக்கடையூர்.

கோவலன் கண்ணகிகள்.

இராகம்-முகாரி, தாளம்-ரூபகம்.

திருக்கடை யூரதிலே சித்ர தேரோடும் வீதினிலே
இருப்பதாய் சொல்லியே ஏகிய மயிலே
எங்குறேன் வீதியிலே (தி)

கோ-வ-ம்:—காதர்கிளியாகிய கருங்குயிலே, கனமிகும் ஞானத்தின் மகளே, உன் காதலின் பொருட்டல்லவோ அருந்தவத்திலீன்றெடுத்து அதிக மேன்மையுடன் வளர்த்து இத்தகைய வாலிபமாக்கிய,

டி மெட்டு.

தந்தைதாய் சுற்றத்தாரை—தாலி—கட்டியதையலரை
தான்விட்டு பிரிந்து யான் வருந்திநின்றேன்
தையலே இந்தவேளை (தி)

கோ-வ-ம்:—அன்று வெற்றிலைச்சுருள் மடித்து தந்த வந்த நாள்முதல் கொண்டு என் தாய் தந்தையாகள் என்னை எவ்வளவோ கடிந்தும் யான் அவர்களுக்கடங்காது.

டி மெட்டு.

உந்தனின் வீட்டைத்தேடி—இந்த—ஊரெல்லாமலைந்தேனேடி
சிந்தனையால் மெலிகின்றேன் யான் கண்மணி
உள்ளமிரங் காதோன் (தி)

கோ-வ-ம்:—ஆ! என்னுருயிர்க்காதலி! உனதாசையின் பொருட்டு இவ்வூரெங்கும் திரிந்தும் வழிதெரியவில்லை, ஆ! மாதவி.

சீன் :—3.] [இடம்:—மாதவி அரண்மனை.

மாதவி அமர்ந்திருக்கின்றாள். கோவலன் வருகிறான்.

மாதவியே மாதவியே என்றமெட்டு.

கண்மணியே பெண்மணியே உன்
காதலால் வருந்து கின்றேன் நன்மணியே க
உன்னையிந்த ஊர்முழுதும் ஊக்கமுடன் தேடினேனே க
மாதா பிதா தனை மறந்தேன் யான்
மாலையிட்ட மாதரையும் வெருத்து நின்றேன் க
தஞ்சமடி தஞ்சமடி அடி
தாசி மாதவியே உந்தன் தஞ்சமடி க

மாதவி-வ-ம்:—மன்மதருக்கு நிகரான மன்னவராகிய உமைப் பிரிந்து இங்ஙனம் வந்ததுமுதல் எவ்வளவோ மனம் வருந்தி தங்களையே எதிர்நோக்கி இருந்தேன், தங்களை இப்போது கண்டேன், கண்டதும் அளவிலா ஆனந்தங்கொண்டேன் வாருங்கள் நாதா! இவ்வாசனத்தின்மீது அமருங்கள்.

கோவ-வ-ம்:—எனதாசைக்குகந்த அருங்காதலி! யானும் உனைப்போலவே இவ்வூர் முழுதிலும் தேடித்திரிந்தேன். ஆதலின், எனதருகில் அமருவாய் கண்மணி.

கோவலன் தரு.

பரமானந்த மெய்ப்பரங்குன்றேன் என்றமெட்டு.

பல்லவி.

மனதிற்கிசைந்த பசுந்தேனே மாதவி மானே (ம)

அனுபல்லவி.

கனமுடன் நாமிருவர் கட்டிலில் படுத்து
கட்டியணைந்து உந்தன் இதழதை கடித்து
குணமாய் கொக்கோகலீலை கோதையே படித்து
குயிலே யிருந்திடலாம் கூசாது தொடுத்து (ம)

சரணம்.

அனமே மதனின் கணை தூரி ஆஹா எந்தனின்
குணமே மயக்குது சிங்காரி குவலயத்தில்
தினமே சுகித்திருப்போம் நாரி-தியங்கி யென்மேல்
சினமே புரிந்திடாதே நீரி சிரித்திவ்வேளை

சித்திரப் பொற்கிளி யொத்ததோர் பத்மினியாளே சிறப்புடனே
நத்தி யிருவரும் சித்தஜன் லீலைபெண்பாலே நாமும் புரிவோம்
வித்தகி எத்திசை தித்திக்கும் செங்கரும்பாளே விதமா யெந்தன்
சொத்தையெலாமுனக்கித்ததிதருகுவேன் கேளேசொகுசாயின்னும்

சரப்பளி பவளமும் ஜன்னல் பின்னலுடனே
திரமுடனுந்தனுக் கேதருவே னினி
பெண்ணே இன்னமும் கண்ணே
மரமல்லி மாலையும் மகிழ்வுடன் ரவையினால்
குறையின்றி யளித்திடு வேனெனைக் கேளடி
பொன்னே மயங்கா திண்ணே
அட்டிகைபதக்கமுடன் ஆனதோர் காப்புகொலுசும்
திட்டமுடனுந்தனுக்கு சேயிழையே வேணுமானால்
மாதே கேட்பாய்நீ கோதே

ஒட்டியாணம் பாடகமும் ஒலமிட்டிடும் காலாழி
மட்டிடாமல் கம்மலது மாதளம்பூ பில்லேயுடன்
கோதே தருவேன் தப்பாதே

காசிபனூர் சேலேயுடன் கண்டாங்கி ரவிக்கை யொன்றும்
நேசியே உனக்கழகாய் நேமமுடன் பூட்டிடுவேன்
சேடி மை டீயர் லேடி

வாசிக்க பள்ளியறையும் வைரத்தினுல் மாளிகையும்
பேசிடத் தனியறையும் பாவையே வேணுமோசொல்வா
யோடி பரிவாய் நாடி

சேர்ந்து இருவருமாய் சரசியே கூடி
சேயன் தியாகராஜனின் அருள்கவி பாடி
சோர்ந்து மனது மெத்த துடிக்குது வாடி
சொகுசாய் முகங்குளிர்ந்து ஒருமுத்தம் தாடி (மன)

கோ-வ-ம்:—எனதருமை மாதவி! குளிர்ந்த வசீகரமுள்ள உனது முகாரவிந்தமானது இன்று இவ்விதம் வாடியிருப்பதேது?

மாதவி-வ-ம்:—நாதா! குபேர சம்பத்துடைய குணாளனையடைந்த எனக்கு என்ன வருத்த மேற்படப்போகின்றது? அது ஒன்றுமில்லே. ஒப்பற்ற உம்மையடைந்த எனது மாளிகை இத்தகைய ஈனஸ்திதியிலிருக்கின்றதே என்ற வருத்தமேயொழிய வேறில்லே.

கோ-வ-ம்:—கன்னலேயொத்த காதலி! இதற்காகவா இவ்வளவு வருத்த முருகின்ருய்? இனி அது விஷயத்தில் சற்றேனும் வருந்தாதே, கண்மணி! இப்போதே உனக்கு வேண்டிய பொருள்களே தருவிக்கின்றேன் பார்.

கோவலன் தனது தந்தைக்கு லிகிதம் எழுதுகிருன்.

கலித்துறை. இராகம்-சுருட்டி.

அருந்தவத்தா லெனேயீன்ற அன்னே தந்தையரே உனது
அருமை பாலன்
தருணமே பணிந்தெழுதும் லிதிகமதின் விபரமது
என்ன வென்ருல்
பெருமையுடன் சுகமளிக்கும் மாதவிக்கு பொருள் சேர்க்க
வேண்டு மையா
அருமைமிகும் தந்தையே அனுப்புவீர் பனிரெண்டு கப்பல்
நாணயமுந் தானே.

கோ-வ-ம்:—கண்மணி! இதோ இந்த லிகிதத்தை என் தந்தையரிடம் அளித்தால் 12-கப்பல் நாணயம் தருவார் அதைக் கொண்டுவரும்படி தெரிவிப்பாய்.

மாத-வ-ம்:—அப்படியே நாதா! அடே! யாரடா சேவன்! இதோ இந்த லிகிதத்தை கொண்டு போய் காவிரிப்பூம்பட்டிணம் மாச்சோட்டான் செட்டியாரிடம் கொடு.

கோவலன் லிகிதம்தர சேவகன் சென்று திரவியம் கொண்டு வருகிறான்.

சேவ-வ-ம்:—பிரபு! திரவியங்களைக் கொண்டுவந்து விட்டோம்.

கோ-வ-ம்:—அழகிலுயர்ந்த அன்னமே! இப்பொழுது திரவியங்கள் வந்து சேர்ந்துவிட்டது! உனக்கிஷ்டமானவைகளைக் கேள் தருகிறேன்.

மாத-வ-ம்:—பிராண காதலா! அப்படி என்ன இருக்கின்றது?

சுருளிமலை மீதுமேவும் சீலா என்ற மெட்டு.

கல்லிழைத்த கம்மலொன்று வேணும் எந்தன்
காலுக்கு செயின்கொலுசு தானும் அதை
மெல்லியா ளணிந்தவுடன் மேனகைபோல அழகு
தோணும் தர வேணும் க

ஒட்டியாணத்தோடு தண்டை நாதா காலில்
ஒலமிட்டிடும் காலாழி போதா நான்
கட்டிக்கொள்ள சேலையொன்று காசினியெல்லாம் புகழ
தாதா என்ன வாதா க

பத்தடுக்கு மாடியது ஒன்று கட்டி
பக்குவமுடன் தருவீ ரின்று இந்த
சித்தினி குளிப்பதற்கு சித்திரக்கல் மேடைதந்தால்
நன்று நாதா இன்று க

கோ-வ-ம்:—கண்மணி! இதற்காக வருந்தாதே நீ விரும்பியவைகளெல்லாம் தருவித்துக்கொள்? வா பள்ளியறைக்கு.

மாத-வ-ம்:—எனது காதலராகிய தங்கள் எனை அழைப்பதின் பொருட்டு யான் வருவதற்கு யாதொரு தடையுமில்லை. ஆயினும், தங்களை ஒரு சேதி கேட்கலாமென விரும்புகிறேன்.

கோ-வ-ம்:—ஏ! கண்மணி, அவ்விருப்பத்தினை உனது முகச்சுழிப்பைக்கொண்டே அறிந்துக்கொண்டேன். ஆதலின்,

என்ன ஏவல் சொன்னாலும் என்ற மெட்டு.

கோ. ஏவல்வது சொன்னபோதும் பூவையே கேட்பேன்மானே
மா. காதலா எனைக்கை விட்டால் காரிழை என் செய்வேனே
கோ. வாராத துன்பம்வந்தாலும் வஞ்சியேயான் கைவிடேன்
மா. நேராக எனக்குசத்யம் நீர்செய்திடில் நம்புவேன்

கோவலன் விருத்தம். இராகம்-ஆனந்தபைரவி.

மதியினைப் பழித்தபெண்ணே மாதவிமானே யுன்னை
சதியொன்றும் செய்வதில்லை சத்திய மாகயானும்
அதிபதி யானவந்த அபனிட கட்டளைப்போல்
பதிவிட்டு எந்தனுவி பறந்திடும் வரையில்தானே.

கோ-வ-ம்:—காதற்கனியே! கணிகை குலத்திற் கற்பகம்போல் அவதரித்த கண்மணி! அதாவது, பலவித துர்நடத்தையுள்ள துரோகிகள் இப்பூவில் அநேகருண்டு. அவ்விதமான சண்டாளன் யானென உனது சொற்பனத்திலும் நினையாதே. ஆதலால்,

கோவலன் தரு.

• காதல் கொண்டேன் கண்ணியனே என்ற மெட்டு.

பல்லவி.

காதல்கொண்டேன் கண்மணியே என் ஆருயிரை
கார்த்தருளும் பெண்மணியே உன்மீதி லுண்மை (கா)

அநுபல்லவி.

காரணி பூரணி சுதந்தர தாரணி வாரணி இதந்தர (கா)

ஈதுடங்கள்

கஞ்சத்தாள் கெஞ்சித்தா ளதிசுக
மிஞ்சித்தாள் கொஞ்சித்தாள் மருவிட (கா)

கருத்தில் நினைத்த படிக்கு ரமிக்க
வருத்த மனைத்து மகற்றி இருக்க (கா)

கலவித்தொழி லற்புத விற்பனி வுனை
குலவிப்பழகத் தருணத்தினில் மிக (கா)

தொகையரா.

செந்தமிழின் குருமுனி வமர்ந் திருக்கும் பொதியமலைச்
சிகரத் தென்றல்
சந்ததமும் புலியெனவே சீறிவர மதியல்போல்
தகிக்க மாரன்
கந்தமலர்க் கணைத்தொடுத்துக் கதரிடவே வருத்துமிந்த
காலந் தன்னில்
சொந்தமுடன் அபயமளித் துதவிடவே தகுந்தபெருந்
துணைவி நீயே.

சாணம்.

கரும்பு தின்றிடக் கூலி—தனை—விரும்பி நின்றிடக் கேலி
கட்டுக்கதைகளை வீணிலே நம்பிக்
கெடடுச் சுடமத நோயிலே வெம்பி

காலம்போக்காதே—மணக்—கோலம் புரிந்தார்க்குணம்
காக்ஷித்தரும் இல்லறமே பாஸ்கர
சாக்ஷிபெரும் நல்லறமே சாஸ்பத (கா)

மாதவம்:—வணிகர் குலத்தில் வைரம்போலவதரித்த வல்லவா! யானும் தங்களின் காதலைதான் எதிர்பார்த்த வண்ணமாக இருந்தேன். ஆதலால்,

மாதவி தரு.

காதல்கொண்டேன் கண்ணியனே என்றமெட்டு.

பல்லவி.

காந்தீபனே கல்யாணமாம் நமதிருவர்
கலந்திருக்க சோபனமாம் கபடமில்லா (கா)

அனுபல்லவி.

காதலா தாமதமே னினி வேதனை யாகினேன் மாதினி (கா)

மதுடங்கள்.

காமத்தால் நேமித்தா னுந்தனை
க்ஷேமத்தால் சோதிக்கா தெந்தனை (கா)

கனத்த மனத்தை நினைத்த படிக்கே
பிணக்கை தவிர்த்து அணைத்து சுகிக்க (கா)

கஞ்சம்மலர் மாரவேள் தன் கணை
நெஞ்சம்பிளக் கின்றதே நீநினை (கா)

தோகையரா.

கந்த பரிமளமிகும் கனவயிர பஞ்சணையில்
கலந்திவ் வேளை
சிந்தையது களிக்கவே சிறப்புடன் கொக்கோக
சிற்றின்பம் போல்
சொந்தமாய் லீலைகளை சொகுசாக புரியவே
தென்றலாலே
விந்தையாய் சுகித்திட வையகந்தன்னில் வடி
வமைந்த சிங்காரன் நீயே.

சரணம்.

கண்ணியனே ஒரு முத்தம்—தா—புண்ணியமே பெரும் சித்தம்
காணத்தா னுனே காதலு முற்றேன்
மோனத்தால் துய ரதிகமே னுற்றேன்
கபடம் செய்யாதே—நம்—சபதம் பொய்யாதே—இனி
கண்டிடுவாய் தியாக ராஜனின் பதமே
விண்டிடுவோமினி விகசித நிதமே (கா)

இருவரும் பள்ளியறைக்குள் செல்கின்றனர்.

சீன்:—½] [இடம்:—கர்னகி வீடு.

கர்னகி தனது சகிகளுடன் இருக்கையில் அருகிலிருந்த நிலைக் கண்ணுடியில் தனது முகத்தைக் கவனித்து.

கர்-வ-ம்:—அடி! சகிகாள்! என்னடி இது? ஆச்சரியம்!

நிச்சயமாய் தீர்க்க கடனுக்கு என்றமெட்டு.

பல்லவி.

தாலியது கழுத்தில் தானே ஜொலிக்குதடி
தரித்தவ ரெங்கே சொல்லடி (தா)

அனுபல்லவி.

வாலீப காலத்திலே வஞ்சியே கழுத்தினிலே
வகையுடனே இம்மாலே வந்ததேனே பெண்பாலே (தா)

கவி. கங்கணம் கரத்திலேது கனமுடனென் கழுத்தில்
மங்கல்யம் தனை தரித்த மார்க்கத்தை யுரைசெய்வீரே

ஷை பாட்டு சரணம்.

தாஷ்டீகமாய் வாணிகர் தன்குலத்திலுதித்து
தாதியே கற்பழிந்தேனடி இப்போ
சேஷ்டையுடனே யெந்த சண்டாளனே கழுத்தில்
சூட்டினுன் தாலிதானடி
தாரணியெங்கும் புகழ் தனைவகித்த மாணுகன்
தனக்கு அவமதிப்பை தான்தேடி வைத்தேனடி (தா)

கர்-வ-ம்:—என்னடி? ஆண்வாடையே இல்லாத இந்த அரண் மனையில் என்னை யரியாமல் என் கழுத்தில் மாங்கல்யம் சூட்டினவர் யாரடி, ஒருவேளை எனக்கு விவாகமாகிவிட்டதா என்ன? அப்படி விவாகம் நடந்திருந்தால் என தாளனுர் அருகிருக்கவேண்டுமே? என் னடி இதின் விபரம் ஒன்றும் தெரியவில்லையே?

சகி வ-ம்:—அம்மணி! யாரும் தங்களுக்கு கபடமாக மாங்கல்யம் சூட்டவில்லை, சில வருடத்திற்கு முன் இவ்வூர் மாச்சோட்டான் செட்டியார் புத்திரராகிய கோவிலச் செட்டியாருக்கு உன்னை 5-வயதில் விவாஹம் செய்து தந்தனர். அச்சமயம் நடனம் புரிய வந்த மாதவி என்னும் தாசி உன் நாதன்மீது மாலையை எரிந்து அவரை தனது இல்லத்திற் கழைத்துச்சென்ருள். அவர் சென்று 12-வருட மாகின்றது அவரது தாய் தந்தையர் அவரை யழைப்பிக்கும் பொருட்டு எவ்வளவோ முயற்சித்தும் ஒன்றும் முடியாது போய்விட்டது தாயே.

கர் வ-ம்:—என்னடி இது? ஆச்சரியம்! காசு கொடுப்பவரை கணவனெனக்கருதும் கணிகைகுலக் காதகியை காலமும் சதமென நம்பிக் கெட்டழிந்தவர்களின் கதைகளை அன்னவர் கிஞ்சிற்றேனும் படித்துணர வில்லையா? அச்சண்டாளிகள் பொருள் கொடுப்பவரை புருடனென மதிப்பார்கள், பொருள் கொடாவிடில் பலவிதமாக இழித்தும் பழித்தும் பேசி ஆடைமுதலுரிந்துக்கொண்டு அவமதித்து அனுப்பும் அலகைகளை நம்பி அவர் 12-வருட காலமாக அங்கு இருக்கும் காரணம் யாது? அவளிட்டமருந்து அத்தகையதா யிருக்கலாம். அதனுல்தான் அவரது தாய் தந்தையரின் மொழிக்கும் மனம் இடந்தரவில்லை. ஆதலின் யான் எனதுயிர்போகும் தருவாயிலிருப்பதாக லிகிதமனுப்புகிறேன். அதற்காவது வருகின்றனரா பார்க்கலாம்.

சகி ஓலை எழுத்தாணி கொடுக்க, கர்னகி லிகிதம் எழுதுகிருள்.

கர்னகி விருத்தம். இராகம்-காம்போதி.

அன்புடன் மாலையிட்ட ஆளனே உனதுதேவி
கர்னகை மாதுயானும் கைலாயம் சேரப்போறேன்
உன்முகம் கண்டேனுனல் உயிர்போகும் அதின்பின்னுலே
என்னைநீர் தகனம்செய்து ஏகுவீர் வேசிவீடே.

சகியிடம் லிகிதம் கொடுத்தனுப்புகிருள்.

சீன் :—5.] [இடம்:—மாதவி வீடு.

சகி கோவலனிடம் ஓலைத்தர அதைக்கண்டதும் கீழேவிழுகிருன்.

கோ வ-ம்:— ஹா! கண்மணி.

திக்கில்லா பாவியானேன் என்றமெட்டு.

ஐயோ என் கர்னகையே ஆஹா என் கர்னகையே
அலையவிட்டுச் சென்ருயோ என் கர்னகா க க (ஐ)

ஐந்து வயதினிலே அறியாத நாளையிலே
அன்னமே உனை மணந்தேன் என் கண்ணே க க (ஐ)

பன்னிரண்டு வருடம் பாதகனைப் பாராது
பரமன் பதியே போனாயோ என் பெண்ணே பெ பெ (ஐ)

மாங்கனி கையில் தந்து மடிமீ துனையிருத்தி
மணமுடித்தே னன்னமே என் கர்னகா க க (ஐ)

கோ-வ-ம்:—மானிலமெல்லாம் புகழ்வகித்த மாணாக்கனின் புதல்வியே! மாச்சோட்டான் செட்டியின் மருமகளே! ஐயோ! உனை ஆரிரெண்டு வருடமாய் பாராதிருந்தமையால் இச்சண்டாளனின் முகத்தில் விழிக்கப்படாது என நினைந்து அந்த சர்வலோக சடாக்ஷரனின் தாளடியை யடைந்தனையோ? என தருமை கர்னகா! உன்னையே சதமென எண்ணியிருந்த என்னை நட்டாற்றில் கட்டு மரத்தை அவிழ்த்து விட்டதுபோல் பாதவிக்க விட்டனையே, இதுவும் உமைப்போன்ற உத்தம ஸ்திரீகட்கு அழகா? ஹா! இனி என்ன செய்யப் போகின்றேன்? (இதற்குள் மாதவி வருகிறாள்.)

மாதவி-வ-ம்:—என்ன நாதா தங்களுக்கு?

அடித்ததாருன்னை நீர் அழுவதேனையா
துடித்து மிகுந்த வருத்தமடையும் சோகமேனையா (அ)

யார்என்ன செய்தார் அதை அரைகுவீர் நீர்தான்
அடித்தவரை என்னிடத்திலுரைத்தால் தண்டிப்பேன்யான்தான்()

மாதவி-வ-ம்:—உனது உயிருக்கு உயிராக யானிருக்க உன்னை யார் என்ன தெரிவித்தனர்? அடே தம்பி! நீ ஏதாவது மாமாவை தூஷித்தாயா? மாமா! நீர் ஏதாவது இவரை அடித்தீரா?

மாமா-வ-ம்:—ஐயோ பாவமே, நானா அடித்தேன்? வாஸ்தவமே? என்னம்மா செய்வது? யான் செய்கிற பாவங்களைப்போக்க எந்தக்கோவில் குளத்திற்குப்போகிறேன்? ஆதலால் அந்த பாவங்களை எல்லாம் இவர் கொட்டிக் கொள்ளுகிறார் போலிருக்கின்றது. ஏனையா செட்டியாரே! யானா தங்களை யடித்தேன்?

கோவ-வ-ம்:—மாதவி! என்னை ஏன் இவர்கள் அடிக்கப்போகின்றனர்? இல்லை! ஆதியில் அக்கினி குண்டத்தின் முன்பாக உட்கார்ந்து திருமணம் புரிந்த எனது மனைவி மரணாவஸ்தையி லிருப்பதாக லிகிதம் வந்தது! ஆதலால், அங்கு சென்று அன்னவளின் முகத்தைப்பார்த்து விட்டு வருகிறேன் கண்மணி!

மாதவி-வ-ம்:—பேஷ்! பேஷ்! நன்றாயிருக்கின்றதே அவளுடைய அழகுக்கு ஆம்படையான் ஒன்றா? அல்லது, உன்னுடைய இழவுக்கு மனையாட்டி ஒன்றா? அவள் போனால் போகின்றாள் சனியன் ஒழிந்தது யானிருக்கும்வரை தங்களுக்கு என்ன குறைவு?

கோவ-வ-ம்:—கண்மணி! நீ மொழிவதும் உண்மையே ஆயினும்,

அன்னமே நான் தாலிகட்டி என்ற மெட்டு.

கண்மணியே கர்னகையை கண்டுவெகு நாளுமாச்சு
காரிழையாள் மாண்டதாக கண்டேனடி யான் லிகிதம்
பெண்மணியை நான் மணர்ந்து பன்னிரெண்டு வருடமாச்சு
பாங்கியர்களாலே அந்த பத்தினியாள் தான் வரைந்த
ஓலையும் கண்டேன் மன வேதனை கொண்டேன்—யான்
அன்னவளை பார்த்துவர அன்னமே விடைகொடடி (க)

கோ-வ-ம்:—அழகில் நீ அவளுக்கு மீடின்றிருந்தாலும்,

ஷை வர்னமெட்டு.

அந்தமுள்ள பெண்மணியும் அரன்பதி சேர்ந்தாளென்றால்
அப்பொழுதே எந்தன் ஜனம் ஆவலுடன் வந்திடுவார்
எந்தனையும் எங்கேயென்பார் இல்லையென்று சொல்வாரானால்
எப்படியும் ஜாதிவிட்டு ஏந்திழையே நீக்கிடுவார்
ஏது செய்குவேன் எவரையடுப்பேன் மன
சிந்தனை தவிர்த்திப் போதே சுந்தரி விடைகொடடி க

கோ-வ-ம்:—பிரியசகி! இதுவுமல்லாது.

ஷை வர்னமெட்டு.

மாமயிலே எந்தனுக்கு மைந்தனில்லை யாதலாலே
மாகூழியுடயானே சென்று மாதவட்கு கொள்ளிவைத்து
தாமதமின்றியே மானே தாலிமுதல் வாங்கிக்கொண்டு
தாட்டிகமுடன் வருவேன் தையலரே இப்பொழுது
என்னை விடடி ஏகிவாரேனடி—அடி
ஏதுக்கும் நீ அஞ்சிடாதே ஏகாங்கியே இச்சமயம் க

மாதவி-வ-ம்:—நாதா! முன்னமே என் தாயார் தங்களைப்பற்றி அனேகவிதமாக தெரிவித்திருக்கின்றாள் என்னவெனத் தெரியுமா?

மலடிவயிற்று மகன்போலே என்ற மெட்டு.

மாத. ஆடவரை நம்ப லாகாது என்று
அறிவித்தா ளெனதுதா யப்போது ஆஹா
அது வுண்மையானது புவிமீது—யானு மறிந்தேனே

கோ-வ-ம்:—எனக்கு அவர்கள் எவ்வித உபசாரணை புரியினும்.

கோ. மனம் சகித்தங்கன மிருப்பேனே அடி
மாதவி ஆசையை மாப்பேனே வெகு
மகிழ்வுடன் விடையளிப்பாய் மானே—ததி நீ தானே

மாதவி-வ-ம்:—சரி தாங்கள் சென்று வருவதனுல், நீங்களிருந்த பாவனைபோல் யான் பார்த்திருக்கும் பொருட்டு.

மாத. பொற்பதுமை ஒன்று அமைத்திடுவீர் எந்தன்
புண்ணியரே இங்கு விடுத்திடுவீர் பின்பு
புகழுடன் சென்றுநீர் வந்திடுவீர்—புவிசீமானே

கோ-வ-ம்:—அடி! எனது ஆசைநாயகி! அங்கு கர்னகியின் பிரேத மிருக்க, உனக்கு யான் எப்போது பதுமை யமைத்து தருவது? அதன் பிறகு அந்த மாதரசியை எப்போது தகனஞ்செய்வது? ஹா! விதியே! இதுவும் சிவன் செயல்தானு? அடி! பதுமை செய்துதந்த பிறகாவது போக உத்திரவுதானு?

மாதவி-வ-ம்:—ஆஹா! தடையில்லாமல் போகலாம்.

பதுமைக்காக கோவலன் கர்னகியை நினைக்கிறுன்

பத்தினி கர்னகையே என்ற மெட்டு.

கற்பில் மிகுந்தவளே என் கர்னகி மாமயிலே நீ
கற்புள்ள மாதானுல் கட்டாயம் பதுமை கனமாய் அமையவேணும்

(கோவலன் மாதவியைப் பார்த்து)

கோ-வ-ம்:—எனதன்புள்ள காதலி! நீ தெரிவித்ததைப் போலவே!

கோவலன் ஷை மெட்டு.

பொற்பதுமை யமைத்தேன் இனி போகவிடை கொடடி-அந்த
பொற்கொடி மாண்டதை இப்போதே கண்டுயான்பற்றிவருவேனடி

மாத-வ-ம்:—(பதுமையைப் பார்த்து) நாதா! அவரைப் போகச் சொல்லட்டுமோ? ஐயோ! இதென்ன பதுமை பேசவில்லையே? அதெல்லா முடியாது, பதுமையை பேசவைத்துதான் போகவேண்டும்.

கோ-வ-ம்:—ஹா! கர்னகா, உன்னைக்காண எவ்வளவோ முயற்சித்தும் ஒன்றும் பயன் படாதுபோல் தோற்றுகின்றது? பதுமை எங்கேயாவது பேசுமா? என்ன செய்வது? கற்பினுக் கருங்கலமாகிய எனது கர்னகையை நினைத்துப் பார்க்கின்றேன்!

கோவலன் ஷை மெட்டு.

வணிகர் குலத்தினளே மாணுக்கன் செட்டி மகளே-பதுமை
தானுக பேசிட தையலே கண்பாராய் தருணனே மாமயிலே

பதுமை-வ-ம்:— அடி! தேவடிச் சிருக்கியே, எனது அண்ணனை போகவிடு, அல்லாவிடிலிந்த துடப்பக்கட்டை முரிந்துவிடும்.

கோவலன் மாதவியிடம் விடைபெற்றுச் செல்கின்ருன்.

சீன்:—6.] [இடம்:—கர்னகை வீடு.

கர்-வ-ம்:—அடி சகிகாள்! பார்த்தீர்களா? என் நாதன் இன்னும் வரவில்லை? அதின் விபரமும் ஒன்றும் தெரியவில்லை, ஆயினும், இதோ தெரிந்துக்கொள்ளலாம். அஞ்சனச்சுவடியை எடுத்து வாருங்கள். (அஞ்சனத்தில் பார்த்து) அடி! அச்சண்டாளியின் கர்வத்தைப் பார்த்தீர்களா? என் நாதனை ஏமாற்றி பொற்பதுமையமைத்து விளையாடிக் கொண்டிருப்பதை இதோ அவளின் கர்வத்தை யடக்குகின்றேன் பார்.

கர்னகி விருத்தம்.

எந்தனின் நாதன் தானும் இழிகுல மாதவிக்கு
சொந்தமா யமைத்துவைத்த சுந்திரப் பதுமையோநீ
விந்தையாய் அவர்களெல்லாம் விம்மியே தியங்கிவாட
அந்தமா யிந்தவேளை அனல்கொண்டு எரிகுவாயே.

கர்-வ-ம்:—ஏ! பதுமையே! இந்த க்ஷணமே நீ எரியக்கடவது.

சீன் :—7] [இடம்:—மாதவி வீடு.

பதுமை எரிகின்றது, மாதவி திரும்பிப்பார்த்து.

மாத-வ-ம்:—ஐயோ! அம்மா! அம்மா! அப்பாவி செய்துவைத்துப்போன பதுமையைப் பார்த்ீரா எப்படி இருக்கின்றது?

மா-தாய்-வ-ம்:—நான் சொல்லிக்கொண்டே இருந்தேனே என் பேச்சை கேட்டால் தானே இப்போது யார் என்ன செய்வது?

மாத-வ-ம்:—அதற்கென் அவரை இதோ வரவழைக்கின்றேன்.

மாதவி பாம்பால் மாண்டதாக மாமாவிடம் ஓலையனுப்புகிருள்.

800 009 172340

சீன்:—8] [இடம்:—ரோட்.

கோவலன் போகும் சமயம் மாமா லிகிதத்தை தந்து புலம்புகிறர், உடனே கோவலன் அந்த லிகிதத்தை பார்த்து விட்டு.

கோ-வ-ம்:—ஹா! ஜெகதீசா! (கீழே விழுகிருன்.)

வேலாயுதக் குமாரா என்ற மெட்டில் பின்னடி வேறு.

மாண்டனளே காதல் தந்த மாதவியாள்—இம்
மானிலத்திலெனை விடுத்து மறைந்தாளோ அரவங்கடித்து (மா)

விருத்தம்.

ஆண்டவன் விதியுனக்கு அமைந்ததோ கண்ணே இன்று
வேண்டிடா துயரங்கொண்டு விடுத்துமே எனது ஆசை
தூண்டியின் மீனைப்போல துடித்திட என விடுத்து
பூண்டையோ ஈசன் பாதம் போனயோ இன்றுபெண்ணே

ஷை பாட்டுத்தோடர்.

மாது கர்னகியைக் காண
மனது வைத்து வந்தேன் யானே
பாதக அரவத்தாலே பற்றியே மாள விதியோ (மா)

கோ-வ-ம்:—ஏ! ஏகாக்ஷரப் பரம் பொருளே! எளியேனுகிய யான் இவ்விதமெல்லாம் வருந்தலாகுமா? இதனுல் உனக்கு சேரும் பழி பாவங்கள் போகுமா? ஐயோ! உலகில்யாரும் ஒருவரை இழப்பது சகஜந்தான். ஆனல், யானே? இருமாதரையுமிழந்து இறகற்ற பக்ஷிபோல் ஏங்கி நிற்கலானேன். ஹா! என்ன செய்வது? மாதவியை எடுத்து தகனஞ்செய்து விட்டாவது காவிரிப்பூம் பட்டினம் சென்று எனது பத்தினி கர்னகையை தகனிக்கின்றேன். மாமா வாருங்கள். (கோவலன் மாமாவுடன் போகிருன்.)

சீன்:—9.] [இடம்:—மாதவி வீடு.

மாதவி அமர்ந்திருக்கின்றுள் கோவலன் வருகிறன்.

கோ-வ-ம்:—ஹா! என்ன இது? உயிருடன் இதோ அமர்ந்திருக்கும் அம்மாதர்க்கரசி இவ்விதம் லிகிதம் எழுத காரணமென்ன? நாம் இவளை அப்படி ஒன்றும் வஞ்சித்து செல்லவில்லையே? அடி!

கோவிலன் தரு.

அனியாயம் அனியாயம் என்ற மெட்டு.

பிடுபாவி படுபாவி
பாதகத் தொழில் புரிந்த படு

துடியாய் விகிதமதை துரோகியே அனுப்பலாமா
ஜ்டுதியில் விடைகொடடி சென்றுவாரேன் காவிரிப்பூ படு

நஞ்சரவம் கடித்து நானிலத்தில் மாண்டே னென்ருய்
வஞ்சநெஞ்ச முடைய வஞ்சியே மனந்துணிந்தாய் படு

காலேநேர மாகுதடி சீச்சானுங் கூவுதடி
மாலேதரித்த எந்தன் மாதுமுகம் பார்த்துவாரேன் படு

மாத-வ-ம்:—நாதா! தங்களின் பதுமையைப் பார்த்தீரா?

கோ-வ-ம்:— ஹா! என்ன இது? கண்மணி! அப்பதுமை போய் விட்டதைப்பற்றி நீ ஒன்றும் சிந்தியாதே, யான் சென்று வந்த வுடன் இதற்கு மேலான பதுமை செய்து தருகிறேன்.

இராகம்-மோகனம்-தாளம்-ரூபகம்.

மா. போகவிடைதர வேணுமானுலுந்தன்
ஆடைதனைக்கழற்றி தருவீர்

கோ. அப்படியே தந்தேன் பெற்றுக்கொண்டெனக்கு
அன்னமேபோக விடையளிப்பாய்

கோ-வ ம்:—கண்மணி! இதைதானு ஒரு பெரிய காரியமாக கேட்கலுற்ருய்? இதோ எனது ஆடை முதலானதுகளை உனக்கே யளித்தேன் பெற்றுக்கொள். யான் சென்று வரட்டுமா?

மா-வ-ம்:—என்ன? என்ன? போகவா போகின்றீர்? பேஷ்! பேஷ்! தந்திரமாக பேசி ஏய்த்துவிட்டுப் போகலாமெனப் பார்க்கின் றீரா? அதெல்லாம் ஒன்றும் ஒன்று நடவாதகாரியம், அப்படி தாங்கள் எவ்விதமாயினும் போகதான் வேணுமென்ருல்?

ஷை மேட்டு.

மா. பொன்பத்துலக்ஷம் கொடுப்பீரானுலுமக்
கித்ததி ஏக விடையளிப்பேன்

கோ-வ-ம்:—பேஷ்! அதுவும் உண்மையே? ஆதியில் பெரியோ ருறைத்த மூதுரைகளனைத்தும் உன்னிடமே அறிந்தேன், ஆதலின்.

கோவலன் விருத்தம். **இராகம்-தன்யாசி.**

அன்னமே மானேயெந்தன் ஆசைக்கு யிசைந்ததேனே
பொன்பத்து லக்ஷம்யானே பூவையே அளிப்பதற்கு
என்னிடம் ஒன்றுமில்லே எழிலுடன் ஊருக்கேகி
உன்பொன்னை தந்திடாமல் உண்டிடேன் அன்னம்யானே.

கோ-வ-ம்:—எனது ஊருக்குச் சென்று உனது பொன்னைத் தந்துவிட்டு, பிறகு அன்னமுண்பேன், இதுவே சத்தியம், சீக்கிரம் விடைகொடு?

மாத-வ-ம். ஆனால், சென்று வாருங்கள்.

கோவலன் போகிறான்.

சீன் 10.] [இடம் :—கர்னகை வீடு.

கோவலன் வருகிறான், கர்னகை பணிகிறாள்.

கர்-வ-ம்:—பிராணகாதலா! வந்தனம்.

கோ-வ-ம்:—அரும்பொற்பாவாய்! நீ இவ்விதமான லிகிதம் வரைந்து அனுப்பியதற்கு காரணம் யாது?

கர்-வ-ம்:—நாதா! யான் லிகிதம் எழுதியதற்காக மன்னிக்கவும். அதாவது, தாங்கள் என்னை 5-வயதில் மணர்ந்து அம்மாதவியினில்லம் சென்றதின் பொருட்டும், சென்றும் 12-வருடகாலமாய் என் முகத்தை பாராமலிருந்ததின் பொருட்டும் நம்போன்ற குலத்தினருக்கு உசிதமாகாதென அவ்விதம் வரையத் துணிந்தனன் நாதா! . . . .

கோ-வ-ம்:—கண்மணி! அது விஷயத்தில் மனது வருந்தாதே எனக்கோ கடும்பசியால் களை மேலிடுகின்றது. ஆதலால் கொஞ்சம் போஜனம் இருப்பின் கொண்டுவா?

(போஜனம் கொண்டுவர அதை புசிக்க அமர்ந்து பிறகு எழுந்திருக்கின்றான்.)

கர்-வ-ம்:—நாதா! என்ன இது?

முன்னமே சொன்னேன் என்ற மெட்டு.

கர். அன்ன முண்ணாமல் மன்னா எழுந்ததேன்
ஆஹாயான் செய்த குறையென்ன சொல்லுவீர் (அ)

கோ. கண்ணகி மானே கலங்குதென் நெஞ்சமே
பொன்பத்து லக்ஷமே பட்டேனடி கடன் (க)

கர். அவ்விதக்கடன் யாருக்கு பட்டீரோ
ஆரணங்காளெனக் கேயுரை யுரைப்பீரையா (அ)

கோ. மையலே யளித்த மாதவி மானுக்கு
பொன்னைத்தருகாமல் புசிக்கேனடி அன்னம் (க)

கோ-வ-ம்:—அன்னத்தைப் பழித்த ஆரணங்கே! உனது லிகிதத்தைக்கண்டு யான் மாதவியை விடைகேட்க, அதற்கு என்னைப்

போல் ஒரு பொற்பதுமை வேண்டுமென. அப்படியே அமைத்துத் தந்தேன், பிறகு அது எரிந்துவிடவும் எனது ஆடைமுதல் பறித் ததுமன்றி,

கோவலன் விருத்தம். இராகம்-ஆரபி.

பத்தினி யானமானே பாவையாள் மாதவிக்கு
இத்ததி பத்துலக்ஷம் இனிதுபொன் கடனாய்நின்றேன்
சத்தியம் யானும்செய்து தையலே இங்குவந்தேன்
சித்தம்போல் பொன்னவட்கு சேர்க்காமல் அமுதுண்ணேனே.

கோ-வ-ம்:—ஏ பொற்பாவாய்! அதுவுந்தவிர,

கோவலன் விருத்தம். இராகம்-சாவேரி.

காதலி எந்தனுசை கர்னகிமானே அந்த
மாதவி மீதிலாணை வைத்துமே வந்தேன்மேலும்
மாதவள் கடனைத்தீர்க்கும் வரையிலு முருந்தியாக
சாதம்நா னருந்தமாட்டேன் தையலே ஆதலாலே.

நிச்சயமாய் தீர்க்க கடனுக்கு என்ற மெட்டு.

பத்துலக்ஷம் பொன் கடனை பக்ஷமுடனே யளிக்க
பாவையே ஓர் மார்க்கம் கூரடி பத்
தத்திமித்தோ மென்று ஆடும் தேவடிச் சிரிக்கியாலே
இத்தனைக் கஷ்டத்திற் காளாய் ஏங்கிநின்றேன் பெண்பாலே பத்

விருத்தம். இராகம்-தன்யாசி.

பொய்யதை பூண்போருக்கு புகழது புவியிலேது
ஐயையோ பொய்யால்வேண அன்பர்கள் துன்பமுற்றார்
தையலே மோசம்செய்தால் சண்டனும் நம்மைநாளே
பையவே நரகிற்றள்ளி போக்குவா னுயிரைப்பெண்ணே.

ஷை பாட்டு எடுப்பு.

சத்தியத்தின் பொருட்டு சார்ந்து ராஜியத்தை யரிச்
சந்திரன் வெறுக்க வில்லையா பின்
நத்தியே தாகனுடன் காட்டில் கஷ்ட முற்றதை
நங்கையே அரிந்த தில்லையா
சித்தம் போல் பொன்னைத்தராது சேயிழை மாதே உனது
கைத்தல அமுது உண்ணேன் கவனிப்பாய் நீ இப்போது ப

கோ-வ-ம்:—ஆதலால், கண்மணி! இதற்கேதேனும் ஒரு முயற்சி நீதான் செய்ய வேண்டியது.

கர்னகி விருத்தம். இராகம்-தன்யாசி.

வேசியின் கடனை நீக்க வெருத்திட்ட ரன்னமுண்ண
மோசமே யனேகஞ்செய்து மோசுத்தி லாழ்ந்தச்செய்யும்
தாசியின் தோஷமொன்றும் தலைவரே நமைச்செய்யாது
யோசியாதி ரிவ்வேளை உண்பீரே அன்னந்தானே.

கர்-வ-ம்:—பல பேர்களையும் மோசஞ்செய்து பொருள்பரிக்கும் பரத்தையர், பெரிய தனவந்தராயினும் ஒரு நிமையில் மனது வைத்தால் ஓட்டாண்டியாக்கும் ஊதரிமுண்டையின் மீது சத்தியம் வைத்து வந்தால் அது நம்மை என்னசெய்யும் நாதா! அதையெல்லாம் நினையாமல் வாருங்கள் அன்னம் புசிக்க.

கோ-வ-ம்:—கண்மணி! "வாயார உரைத்தால் தாயாரை விற்று கொடு" என்னும் மூதுரைப்படி அவள் எத்தகைமோசச்செய்கையி லீடுபட்டவளாயினும், நாம் சத்தியமெனும் சாகரத்தைத் தாண்டலாகுமா? அவ்விதம் தவரினுல் அதனுலேற்படும் பழிபாவங்கள் போகுமா? வேண்டாம், இதற்கேதேனும் ஒரு மார்க்கத்தை நீதானுரைக்கவேண்டும்?

கர்-வ-ம்:—பிராணகாந்தா! நம்மிட மிருந்த திரவியங்களனைத்தும் அச்சண்டாளியின் வசம் ஒப்புவித்துவிட்டீர்? அதுவும் போதாமல் இப்போது பத்துலக்ஷம் பொன் கடன்பட்டதாகவும் உரைக்கின்றீர்? ஏதேனும் பொருளிருப்பின் அதை விற்றுகிலும் அக்கடனை தீர்க்கலாம். அப்படியும் ஒன்றுமில்லையே, என்ன செய்வது நாதா!

கோ-வ-ம்:—கண்மணி! அதற்காகவா வருந்துகின்றாய்?

கோவலன் கலித்துறை. இராகம்-பைரவி.

சாதகமாகவே நடம்புரிந்தன்று எனை அழைத்துச்சென்ற
மாதவியாள்கடன் பெரிதென்று நீயொன்றும் மலைக்கவேண்டாம்
வேதனையின்றியே அப்பத்துலக்ஷம் பொன்னை தருவதற்குன்
பாதச்சிலம்பொன்று போதுமடி வணிககுல பசுங்கிளியே.

கோ-வ-ம்:—இதை விடுத்து வீணாலோசனை புரிகின்றனையே?

கர்-வ-ம்:—நாதா! இச்சிலம்பு என்னுடன் பிறந்ததாயினும், இதைக் கழற்ற கடையாணியும் கிடையாதே எவ்விதம் தருவது?

கர்னகி சோமசுந்தரக் கடவுளை நினைக்க திருகாணி உண்டாகிறது அதைக் கழற்றும்போது அசரீரி சொல்லக்கேட்ட கர்னகை

கர்-வ-ம்:—நாதா! அசரீரி சொன்னதை கவனித்தீரா?

கோ-வ-ம்:—பெண்மணி! நமது சிலம்பை விற்க நாட்டி லஞ்சுவானேன்? இதனல் ஒரு குறையும் வருவதில்லை நீ அஞ்சாதே.

மார்க்கத்தில் கண்டகனி என்றமெட்டு.

கர்.	சண்டாள பாண்டியர் செல்ல வேண்டாம்	வாழும் மதுரைக்கு நாதா
கோ.	அடி-கொண்ட மனைவி கொன்றிடவும்	சிலம்பை விற்றுலெனை தோதா
கர்.	பழிபோட்டு கொன்றிடும் பத்தாவே போக	பாண்டியர் நாட்டுக்கு வேண்டாம்
கோ.	அடி-அழிவிலா தென்கூடல் அன்னமே பழிக்க	பூமியதை ஒன்றும் வேண்டாம்
கர்.	சேலம் தஞ்சை சென்று	மாயவரம் கும்பகோணம் வருவீரே
கோ.	பெண்பாலே நம்குலத்தோர் பேசுவார்	கண்டால் இழிவாக தையலரே
கர்.	அப்படியானலே அன்பாய்	ஆரணங்காளுன்பின் வருவேனே
கோ.	இது-ஒப்பாதடி பெண்டீர் உத்தமியே	ஆளன்பின் வருவது மானே

கோ-வ-ம்:—மாலையிட்ட மனைவியும், கட்டுச்சாத மூட்டையும், கைக்குழந்தையும் கைக்கு பாரமென்பார்கள்? புருடர்கள் திரவியம் தேடச் செல்லுமிடத்திற்கு பெண்டீர் வருவது நன்கல்ல, எல்லா முணர்ந்த நீயே இவ்வித முறைக்கில் யானென்ன சொல்வது? ஆனல் நீ நம்மிருவருக்கும் கொஞ்சம் கட்டமுது கட்டிக்கொண்டுவா.

கர்-வ-ம்:—அப்படியே நாதா! (கர்னகி போகிருள்.)

கோ-வ-ம்:—சென்று விட்டாள் இதுதான் சமயம் அவள் வருவதற்குள் சென்று விடலாம். [கோவலன் போகிறுன்.]

கர்னகிவந்து நாதனைக் காணுததை அறிந்து வழியில் மாதவிபோல் பதுமை தோன்றபடி செய்கிருள்.

கர்னகி வெண்பா. இராகம்-மோகனம்

என்கணவ ஞர்செல்லும் இக்கான கத்திடையே
சொற்னப்போல் மாதவியின் சிலையொன்று—உன்னதமாய்
கண்ணுலே கண்டு காதலித்து என் நாதன்
இன்னுளே நிற்க இசைந்து. [கர்னகி போகிருள்.]

சீன்:—11.] [இடம்:—கானகம்.

மாதவிபோல் சிலைநிற்கின்றது அதை கோவலன் கண்டு.

கோ-வ-ம்:—சகல சுகங்களையுமளித்து, இருதியில் சஞ்சலத்திற்கிடமளித்த சரசியே! உன் கடனையான் கொடுக்க மாட்டேனென்று எனைவழி மறித்து நிற்கின்றாய்? அப்படிக்கொன்றும் நினையாதே அதின் பொருட்டுதான் என் காதலியாகிய கர்னகியின் பாதச்சிலம்பிலொன்றை கழற்றி விற்க புறப்பட்டேன் இதற்குள்.

இராகம்—புன்னுகவராளி, தாளம்—ஆதி.

மாதவி நீ வந்ததேனடி வழி மரித்து
கானகத்தில் நிற்பதேனடி (மா)
ஏதடி உந்தனின் பொன்னை ஏமாற்றி செல்லுவே னென்று
மோசம் செய்வேனென்ற கோபமா மறுபடியும்
வருவேனென்ற மனஸ்தாபமா
ஆசைதந்த மாதரசே அசத்தியன் யானல்லவனடி (மா)

கோ வ-ம்:—கண்மணி! உன்னை ஒருபோதும் துரோகம் புரியேன்! ஏதோ ஒரு முத்தம் தா?

(முத்தமிடுகிறான் அதுகல்லா யிருக்கக்கண்டு.)

கட்டி முத்தமிட்டடக் கல்லாயிருக்குதே என்ற மெட்டு.

மாதவி யெனவேகட்டி முத்த மிட்டேனே
மாவிவள் தேகம்கல்லா இருப்பது மேனோ
மாதரசி கர்ணகையின் மகிமையீதானோ
மர்மமொன்றும் கானகம் தனிலரியேனே

இதை மறைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த கர்னகி.

கர்னகி ஷெ மெட்டு.

நாதா. பாரையைக் கட்டியணைந்தால் பல்லுடைந்து போகாதா
பார்த்தவர்கள் உன்னைபரி காசமே செய்திடாரா

கர்-வ-ம்:—நாதா! பெண்ணும் பாரையும் தெரியவில்லையா?

கோ-வ-ம்:—கண்மணி! வந்து விட்டனையா; ஆயினும் இச்செய்தியை எங்கு முறையாதேவாசெல்லலாம், (இருவரும் போகிறார்கள்)

சீன்:—12] [இடம்:—வனாந்திரம்.

கர்-வ-ம்:—நாதா! இவ்வனாந்திரத்தில் நடப்பதென்றால்! இக்கானகினால் என்பாதங்களை வலிக்கின்றதுடன் களையும் அதிகரிக்கின்றது.

கோ-வ-ம்:—கற்பினுக்குகந்த கர்னகா! கலங்காதே, இதோ இங்ஙனமே அமர்ந்திரு யான் சென்று ஜலம்கொண்டு வருகிறேன்.

பொது-வ-ம்:—கோவலன் போகிறான் கள்ளர்கள் கர்னகியை பயமுறுத்தி நகை முதலியதை வாங்கிக்கொள்கின்றனர், பிறகு மாங்கல்யத்தைக் கேட்க உடனே கர்னகி அவர்களை கல்லாக சமைக்க கோவலன் ஜலம் கொண்டுவந்து அவர்களை கர்னகையால் எழுப்ப கள்ளர்கள் பணிந்து செல்கின்றனர். கோவலன் கர்னகியும் செல்கின்றனர்.

சீன்:—13.] **[இடம்:—மதுரைமாநகர்.**

கோ-வ-ம்:—ஏ கற்பினுக்குகந்த கருங்கலமாகிய கர்னகா! இம்மதுரையம்பதியின் அதிசயங்களை பார்த்தனையா? இம்மறையவர் வீதியின் மகிமையையும், அருகிலிருக்கும் வணிக வைசிய வீதியின் அலங்காரமும் கண்ணுற்றனையா? இன்னவர்களின் விடுதிகளில் எங்காகிலும் அண்டியிரு யான் சிலம்பை விற்று அதிசீக்கிரத்தில் வந்துவிடுகிறேன்.

கர்-வ-ம்:—நாதா! மறையவர் வீட்டிலிருப்பேனாயின் அதிக கடூரமான வேலைகளை இடுவார்கள். வணிக வைசியரோ நம்மினத்தவர்களாதலால் நம்மை மதியார் ஆதலால், வேறெங்காயினும் பாருங்கள்!

கோ-வ-ம்:—கண்மணி! இவ்வீதியைப் பார்த்தனையா?

சேந்தின்மாநகர் என்ற மெட்டு.

அன்னமே இந்த ஆதவர் வீட்டில்
அண்டியிருந்திடுவாயே வெகு
அன்புகொண்டிங்கனம்நீயே மிகு
ஆவலாய் மனம் மேவியே தினம்
பூவையே உனை ஒவிய முடன்
ஆதரிப்பாரறிவாயே உடனே
அன்பாய்வாரேன் தெரிவாயே அன்

கர்-வ-ம்:—நாதா! இப்போதுதான் என் மனது குளிர்ந்தது, அன்னவரிடமிருந்தால், பசிக்கு பால் முதலியவைகளையுண்டு காலங்கழிப்பேன் நாதா? (இதற்குள் இடைச்சி வருகிறாள்.)

அன்னபக்ஷி வாங்குவோருமுண்டோ என்ற மெட்டு.

பால் தயிரு மோரு வாங்கலையோ செய்த
பாவந்தனையே விலக்கும் ஆவினிட ஜீவன் ஆ

பார்வெய்யிலிலே நடப்போர் தாகம் தீர்க்க
பக்குவமாக களித்து விற்கின்றேனே வேகம் வி

கட்டி தயிர் வேணுமானல் தாரேன் கட
னில்லாமல் வாங்கி கொஞ்சம் தான் குடித்து பாரேன் தா

நாளைவரும் போது ஐயா நானே நல்ல
காளைமாட்டு பால் தயிரு கொண்டு வருவேனே கொ

கோவலனும் கர்னகையும் வருவதை யரிந்த இடைச்சி பணிகின்ருள்.

இடை-வ-ம்:—ஐயா! நமஸ்கரிக்கின்றேன்.

கோ-வ-ம்:—அம்மணி! சந்தோஷம் எழுந்திரு, நீ யார்?

இடை-வ-ம்:—ஐயா! யான் இம்மதுரையில் வசிப்பவள். தாங்கள் யார்? தங்களுடனிருக்கும் இப்புனிதவதி யார்?

கோ-வ-ம்:—தாயே! யாங்களா? உரைக்கின்றேன் கேளுங்கள்.

கொடிச்சிந்து.

ஆதவர் மரபில் வந்த தாயே
ஆட்டிடையராச்சி யெய்தி கேட்டு வருவீர்
தோதுடன் வணிகர்குல மன்னர்
தோன்றி வாழும் காவிரிப்பூம் பட்டிணமதில்
மாச்சோட்டான் செட்டியவரும் வெகு நாள்
மாதவம் புரிந்து பெற்ற மைந்தனும் யானே
ஆச்சியரே கோவலனென்பார் இந்த
ஆபரணங்கா ளென் மனைவி கர்னகை யென்பார்
ஐந்து பிராயத்திலே துடைமே
லமர்த்தி மாங்கனியதை கரத்தில் தந்து
விந்தையுடன் மணமுடித்தேன் பிறகு
விலைமாது மாதவிமேல் ஆசையும் பட்டேன்
சொத்துகளெல்லா மிழந்தேன் இன்னும்
சோதனை செய்தென்னையவள் வாதுபுரிய
மெத்தகடனுகி விட்டேன் அதனல்
மெல்லியாளிவள் சிலம்பை விற்கவும் வந்தேன்
மாலையிட்ட நாள் முதற்கொண்டு ஒரு
மார்க்கமு மரியாமலே வீட்டிலிருந்தாள்
வேலையின்றி என்பின் துடர்ந்தாள் வெய்யல்
உபத்திரவத்தாலிவள் மிக மெலிந்தாள்

மணிச்சிலம்பதனை விற்று வருமளவும்
மாதவர் குலத்து தாயே மாது யிவளை
கனிவுடன் கார்த்திடவே உந்தன்
கழல்பணிந்தேன் வேறு கதியுமில்லை ஆத

கோ-வ-ம்:—அம்மணி! அதின் பொருட்டுதான் தயங்குகிறேன்.

பிறகு இடைச்சியுடன் வீட்டிற்குச் செல்கின்றனன்.

சீன் :—14.] [இடம்:—இடைச்சி வீடு.

கோ-வ-ம்:—கற்பில் மிகுந்த கர்னகா! நாளும் அதிகரிக்கின்றது, சிலம்பும் விற்கவில்லை, இப்போது காலை நேரமாகையால் பொழுது விடிந்து விடில் வெய்யல் தாளமுடியாது ஆதலால் யான்.

நல்வாக்கு நீ கோடடி என்ற மெட்டு.

கோ. சென்றுவர விடைகொடடி செஞ்சிலம்பை விற்றுவர
அன்னமே மடமயிலே அஞ்சாதே விடையும்தா செ

கர்-வ-ம்:—நாதா! தாங்கள் செல்லும் இடத்தில் தங்களுக்கேதேனும் இடையூறு நேருமாயின் இவ்வடியாள் எவ்விதமரிவது? ஆதலால்.

கர்னகி ஷை மெட்டு.

போகவிடை தந்திடவும் பொற்சிலம்பு விற்றிடவும்
ஆகாது மதுரையிலே ஆளனேயென் மொழியைக் கேளும் போ

கோ-வ-ம்:—கண்மணி! உனக்கு முன்பே நமதில்லத்தில் இதின் விபரங்களை எல்லாம் கூரியும் இவ்விதம் தடுக்கின்றனையே. அப்படியெல்லாம் ஒன்றும் ஏற்படாது ஆதலால் இது விஷயத்தில்.

கோவலன் ஷை மெட்டு.

சந்தேகம் வேண்டாமடி சந்தோஷமாய் விடைகொடடி
விந்தையாய் அடையாளங்கள் வைத்திடுவேன் பாருமடி

கோ-வ-ம்:—மாக்ஷிமிகும் மானகனுக்கு மாணிக்கம்போல் அகப்பட்டமாதரசியே! இதற்காகவா அச்சமுற்றாய்? இதோ உன்மனதிற்கு தேறுதலடையும் பொருட்டு தகுந்த அடையாளங்கள் இப்பெட்டியில் வைக்கின்றேன் அப்படி யான் செல்லுமிடத்தில் எனக்கேதேனும் ஒரு தீங்கு ஏற்படுமாயின் யான் வைத்திருக்கும் அடையாளங்களாகிய.

கோவலன் ஷெடி மெட்டு

தேங்காயுடையுமடி செம்புஜலம் குறையுமடி
பாங்காக மாங்கனியும் பரிவாய் புஷ்பம்வாடுமடி செ

சந்தனம் உலருமடி திருவிளக்கணையுமடி
சிந்தனை யுராதேயடி சிதரிவிடும் பேழையடி செ

அடையாளம் மாறிவிட்டால் அன்னமே மடிந்தேனென்று
துடியாகதெரிந்துகொள்வாய் தோகையேவிடையளிப்பாய் செ

இந்த அடையாளங்கள் இளமயிலே மாராவிடில்
எந்தவிதத்தினிலும் இச்சிலம்பை விற்றுவாரேன் செ

கோ-வ-ம்:—ஆதலால், பிரியசகி! நீயாதொன்றுக்கும் அஞ்சாது விடைகொடு சென்று சீக்கிரத்தில் வந்து விடுகிறேன்.

கர்-வ-ம்:—நாதா! அப்படியாயின் இதோ நமதருகில் நின்றிருக்கும் இந்த ஆதவ ஆச்சியின் வசத்தில் எனை ஒப்புவித்து செல்லுங்கள் பிராணபதி!

கோ-வ-ம்:—கண்மணி! அப்படியே ஆகட்டும், (இடைச்சியை நோக்கி) தாயே! இம்மங்கையை என் பந்து ஜனங்களறிய விவாகம் புரிந்தும் மாதவியெனும் தாசியின் பொருட்டுயான் இக்கதியடைந்தேன் அடைந்தும் தற்போது இம்மங்கையின் பாதச் சிலம்பில் ஒன்றை கழற்றி யான் விற்றுவரச் செல்கின்றேன் யான் சென்று வருமளவும் இம்மங்கையார் உந்தன்.

மாமுனியே என்ற மெட்டு.

அடைக்கலமே அடைக்கலமே
அருமை காதலியான ஆரணங்காளுந்தனின் (அ)

கோ-வ-ம்:—கதியற்று இக்கானகத்திடையே வந்த எங்களைக் காப்பற்ற வந்த தாயே! ஆயர்பாடி கிருஷ்ணனின் குலத்தில் அவதரித்த ஆச்சியம்மா! இவ்வாரணங்கை ஐந்து பிராயத்தில் கரத்தில் மாங்கனியை அளித்து மாங்காயம் தரித்தேன், அது முதற்கொண்டு எனது முகத்தை இதுவரையிலும் பாராமல் என்னுடன் வந்தாள், இத்தகைய ஒரு கபடமு மரியாத கர்னகா, உன்

அடைக்கலமே அடைக்கலமே
அருமை காதலியான ஆரணங்கா ளுந்தனின் (அ)

கோ-வ-ம்:—வர்த்தகர் குலத்தினர்களாகிய வணிக வைசிய குலத்துதித்த வஞ்சிக்கொடி, மணாளனின் சொல் தவராத மாகுணவதி, மாங்கல்யம் தரித்தும் மணவாழ்க்கையிலீடுபடாத மாதர்க்கரசி, மாதவியின் கடனைத்தீர்க்க யான் மயங்கியிருக்கையில் மணிச்

சிலம்பி லொன்றை கழற்றி தந்து மனதைக் குதூகலத்திலாழ்ந்தச் செய்த மாகுணவதியாகிய இக்கர்னகா, உன்

அடைக்கலமே அடைக்கலமே
அருமை காதலியான ஆரணங்காளுந்தனின் (அ)

கோ-வ-ம்:—யான் பனிரெண்டு வருடம் பரத்தையர் வீட்டிலிருந்தும், பத்தாவின் மீது கொஞ்சமேனும் மனம் சலியாத பாக்யவதி, கரைதுரை வர்த்தகர்களாகிய குபேர சம்பத்துடைய மாச்சோட்டான் செட்டியாரின் மருமகள், மானிலமெல்லாம் புகழ் பெற்றோங்கும் மானகனின் மகள், மாதவம் பொருந்திய காவிரிப்பூம் பட்டணத்தில் அவதரித்த மாபாவியாகிய எனது மனைவி, மணாளனின் சொல்தவராத மங்கையர்க்கரசி மாங்கல்யம் தரித்தும் 12-வருடகாலமாய் மணாளனின் முகத்தைப்பாராத மாதாகிய கர்னகீ, உன்

அடைக்கலமே அடைக்கலமே
அருமைகாதலியான ஆரணங்காளுந்தனின் (அ)

கோ-வ-ம் :—ஆச்சியம்மா! இவளைப்பற்றி யான் அதிகம் சொல்வதற்கில்லை. ஆதலால், இவ்வருங்குழலை அதி ஜாக்கிரதையுடன் பாதுகார்த்துக்கொள் யான் அதி சீக்கிரத்தில் வந்து விடுகிறேன். கோவலன் போகிறான்.

சீன்:—15.] [இடம்:—கம்மாளர் வீதி.

கோவலன் சிலம்புவிற்று வருகிறான்.

இராகம்—மோகனம், தாளம்—ஆதி.

சிலம்போ சிலம்பு
இரத்ன சிலம்பு காற்சிலம்பு (சி)
கற்பில் மிகுந்திட்ட கர்னகையாள் பாதச் (சி)
கூத்திக்கடனை கொடுக்க வந்திட்ட காற் (சி)
பாதத்தி லணிந்தால் பாக்ய மளித்திடும் (சி)

இதற்குள் அவ்விடத்தில் வஞ்சிபத்தன் வருகிறான்.

வஞ்சி-வ-ம்:—ஐயா! தாங்கள் யார்? இங்கு எதற்காக வந்தீர்?

கோ-வ-ம்:—ஐயா! யானிருப்பது காவிரிப்பூம் பட்டினம், என் பெயர் கோவலன் செட்டியார், எனது கூத்தியாகிய தாசி மாதவியின் கடனுக்காக கொண்டவளின் சிலம்பை யெடுத்து விலைகூறி வந்தேன்.

வஞ்சி (தனி)-வ-ம்:—இப்போதுதான் என் உயிர் தப்பியது, ஐயா! நான் யார் தெரியுமா? இவ்வரசாங்கத்தில் தலைமுறைத் தலைமுறையாகத் தொழில் செய்பவன், என் பெயர் வஞ்சிபத்தன், என் தகப்பன் பெயரோ செஞ்சிபத்தன், என் பாட்டன் பெயர் கஞ்சிபத்தன், எனக்கு பிள்ளைகள் இருவரிருக்கின்றார்கள் அதில் ஒருவன் பெயர் குஞ்சிபத்தன், மற்றொருவன் பெயர் நஞ்சிபத்தன், ஆனால் என் மனைவி மாத்திரம் பிள்ளைகளை அவ்விதம் அழையாமல் சுந்திரலிங்கம். சோமலிங்கமென்று அழைப்பாள்? அதுயிருக்கட்டும் எதோ சிலம்பை இப்படிக் காட்டுங்கள் பார்க்கலாம்?

சிலம்பை வஞ்சிபத்தன் வாங்கிப்பார்த்து.

வஞ்சி-வ-ம்:—இந்தச்சிலம்பை விற்றுக்கொடுக்கட்டுமா? ஆம்! இதை விற்றுக்கொடுத்தால் எனக்கெவ்வளவு தரகு கொடுப்பீர்?

கோ-வ-ம்:—ஐயா! எனக்கு வேண்டியது பத்துலக்ஷம் பொன் அதற்குமேல் எவ்வளவாகிலும் அதிகமாக தொகைவைத்து விற்றுக் கொள்ளுங்கள், எனக்கு மாத்திரம் சரியாக பத்துலக்ஷம் பொன் கொடுத்து விடுங்கள்.

வஞ்சி-வ-ம்:—விற்றுக்கொடுத்த பின்பு வேறு விதமாக பேசுவீரோ? சரி வாருங்கள் விற்றுத்தருகிறேன். (போகின்றனர்.)

சீன் :—16.] [இடம்:—பாண்டியன் தர்பார்.

பாண்-வ-ம்:—மந்திரிகாள்! இன்னும் வஞ்சிபத்தன் வரவில்லையா?

இதற்குள் வஞ்சிபத்தன் கோவலனை அழைத்து வருகிறான்.

வஞ்சி-வ-ம்:—அரசே பராக்!

பாண்-வ-ம்:—ஆச்சாரியாரே! சிலம்பு கொண்டு வந்தனையா?

வஞ்சி-வ-ம்:—மஹாராஜ்! இதோ பாருங்கள் தங்களின் சிலம்பு, இந்தத் திருட்டுப்பயல் என்வீட்டு சுவற்றின் மீது காயவைத்திருந்த சிலம்பை களவாடிச்சென்றது மல்லாமல், கம்மாள வீதியிலேயே வசிவிற்க வந்து விட்டான். அடே! என்ன தைரியமடா? உனக்கு திருடிய தெருவிலேயே விற்க வந்துவிட்டாயே?

பாண்-வ-ம்:—அடே! நீயார்? உனக்கு இச்சிலம்பு எது?

கோ-வ-ம்:—ஐயா! யான் வசிப்பது காவிரிப்பூம் பட்டிணம், கூத்தியின் கடனைத்தீர்க்கும் பொருட்டு கொண்டவளின் சிலம்பாகிய இதைவிற்க வந்தேன் வருகையில் இவர் என்னை சந்தித்து தங்களிடம் விற்றுத் தருவதாக அழைத்து வந்தார், வேறொன்றும் தெரியாது.

இதற்குள் வஞ்சிபத்தன் துன்மந்திரியிடம் வந்து.

வஞ்சி-வ-ம்:—ஐயா! மந்திரியாரே, என்னமோ என் உயிரை மீட்டுக்கொள்வதற்காக இந்த வியாபாரிமீது அபாண்ட குற்றம் சாற்றி அழைத்து வந்து அரசனிடம் ஒப்புவித்தேன், இப்போது இவர் சொல்லும் வார்த்தையையும், அரசன் தலையையசைத்து யோசனை செய்யும் நோக்கத்தையும் கண்டால் என்தலைதான் போய்விடும் போல் தெரிகின்றது, ஆதலால் இவ்வடியேன் மீது கிருபை கூர்ந்து என் தலைக்கு பதிலாக அவன் தலையை வெட்டச்செய்தால் நாளையு காலை 7-மணிக்கெல்லாம் தங்களின் சமுசாரத்திற்கு எல்லாம் ரவை செட்டாகவே உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையிலும் பூட்டி விடுகிறேன் தங்கள் இக்காரியத்தை அவசியம் கவனிக்கவேண்டியது.

துன்-வ-ம்:—அடப்பயித்தியக்காரா! இதற்குத்தானா பயந்து விட்டாய்? நீமாத்திரம் சொன்னதை மறந்து விடாதே, அப்படி தூர நில் சங்கதி முழுதும் நான் பார்த்துக்கொள்கிறேன், (அரசனை நோக்கி) அரசே! இவர் நம்மிடம் தலைமுறை தலைமுறையாக வேலை செய்து பல நற்சாக்ஷிபத்திரங்கள் பெற்றுள்ளார். இத்தகையவரை, யாரோ ஒரு திருட்டுப்பயல் பேச்சைக்கேட்டு, குற்றவாளி யாக்குவது நலமன்று தவிரவும், திருடினவன் திருடினேனென உரைப்பானா? ஆனால் அகத்திலழகு முகத்தில் தெரியும் என்பதுபோல் இவன் முகத்தை உற்று நோக்கில் திருடனிவனென்பதற் கையமில்லை.

பாண்-வ-ம்:—அடே சேவக்! இத்திருட்டுப்பயலை கொண்டு போய் கொலைஞர்களால் வெட்டிப்போட்டு வாருங்கள்.

நன்-வ-ம்:-அரசே! ஊர்விட்டு ஊர் பிழைக்க வந்தவரை திருடனென குற்றம் சாற்றிக் கொன்றுவிடுவதுதானா பெரிய காரியம்? அவரைப்பார்த்தால் பெரிய குடும்பத்திலிருந்து கஷ்ட திசையினால் மெலிந்து, வியாபார விஷயமாய் வந்தவர்போல் தெரிகின்றது. இவ்வஞ்சி பத்தனோ மகாஜெகஜாலப்புரட்டன் அதுவுமன்றி கம்மாளத் தம்பிகளில் எந்தத்தம்பி நல்லத்தம்பி, இதை கவனியாது தீர்ப்பு செய்வது நன்கல்ல. ஆதலால் சற்று கவனித்து தீர்ப்பு செய்யுங்கள்.

துன்-வ-ம்:—அரசே! இந் நன்மந்திரியார் எப்பொழுதும் என் பேச்சுக்கு மருப்புக் கூறிக்கொண்டே இருக்கின்றார். திருடனும் அகப்பட்டான், திருடியபொருளும் இவன் கையிலிருக்கின்றது, அப்படி இருக்க, சாக்ஷி ஒன்றுவேண்டுமா? சிலம்பு இவனுடையதாயிருக்கும் பக்ஷத்தில் பாம்புகளைப் பிடித்து ஒருபெட்டி லடைத்து அப்பெட்டியில் இச்சிலம்பைப் போட்டு விடுங்கள் அதை இவன் எடுத்துக்கொள்ளட்டும்.

சிலம்பை பாம்பு பெட்டியில் போட கோவலன் எடுக்கிறுன்.

பத்தினி கர்னகையே என்ற மெட்டு.

கள்ள மில்லாதவளே வெகு கற்புள்ள மாதரசே—இந்த
காதகரென்மீது சாதனை செய்குரார் கார்த்திட வேணுமடி

துன்-வ-ம்:—அரசே! இவன் மலையாளவித்தையில் தேர்தவன் இவனை நம்பாதீர் காய்ச்சிய நெய்க்கொப்பரையில் இச்சிலம்பை போட்டு எடுக்கச் சொல்லுங்கள், திருடு வெளியாகி விடுகிறது.

தாட்டிக முள்ளவளே நீ தந்த சிலம்பினாலே—இங்கே
தட்டான் கையிற்சிக்கி பட்டே வெகுகுறை தற்கார்க்க வேணுமடி

துன்-வ-ம்:—அரசே! இச்சண்டாளன் எப்போது பார்த்தாலும் ஏதோமந்திரத்தைச் சொல்லிக்கொண்டே எடுத்து விடுகிறுன், கடைசியாக புலிட்டில் போடுங்கள் அப்போது எப்படி எடுத்து வருகிறுன் பார்ப்போம். (புலிகூண்டிலசிலம்பை போட.

பக்தி மிகுந்தவளே உயர் பாக்கியசாலியரே—உந்தன்
பாபமோதான் மனஸ்தாபமோ இங்ஙனம் பாதுகார்த் திடுவாயடி

துன்-வ-ம்:—பேஷ்! அரசே! யான் இதுவரையில் எவ்வளவோ கள்ளர்களைப் பார்த்திருக்கின்றேன், ஆனால் இத்தகையவனைப்போல் கண்டதில்லை? இவனால் வெகு நம்பிக்கையுள்ள பேர்வழிகள் நம்பிக்கைகளும் மாரிவிடும்போலிருக்கின்றது? ஆதலால் இவனை லேசில் விடில் இம்மதுரைக்கே தீங்குகளை விளைப்பான்.

பாண்-வ-ம்:—(சற்று மௌனமாயிருந்து) அடே! கொலைஞர்களே இக்கள்ளனைக் கொண்டுபோய், வெட்டி விடுங்கள்.

கொலைஞர்-வ-ம்:—அப்படியே செய்கிறோம் பிரபு!

கொலைஞர் கோவலனை அழைத்துப் போகின்றனர்.

துன்-வ-ம்:—ஐயா ஆச்சாரியாரே! மறந்துவிடப் போகிறீர்.

வஞ்சி-வ-ம்:—என்ன? என்ன?

துன்-வ-ம்:—தாங்கள் தெரிவித்ததை மறந்துவிடப் போகிறீர்.

வஞ்சி-வ-ம்:—என்ன் தெரிவித்தேன்?

துன்-வ-ம்:—என்ன ஐயா! பிரட்டி பேசுகின்றீரே? என் மனைவிக்கு நகை போடுவதாக தெரிவித்தீரே மறந்து விட்டீரா?

வஞ்சி-வ-ம்:—அடப்பாவி! நானு சொன்னேன்? திருடனை பிடித்து வந்து, இவன் திருடனே, வியாபாரியோ தாங்களே யோசித்து தீர்ப்பு செய்யுங்கள் என்றேன், அதற்கு அவன் மீது கடூரமான குற்றங்களைச்சாட்டி கொன்று விட்டாயே அடப்பாவமே!

அவன் யார்பெற்ற பிள்ளையோ? அவனை அனியாயமாய் கொன்ற உனக்கு கடவுள் நல்லகதி கொடுப்பாரா? உன் பிள்ளைக்குட்டிகள் முகத்தில் நீ அபக்கென்று விழிக்கமாட்டயா? உலகில் வரும் வாந்தி பேதி முதலிலேயே உனக்கு வாராதா? இந்த பவுஷுக்கு நகை வேண்டுமா? போடாபோ மரியாதையாக உதைக்கப்போகிறேன்.

துன்மந்திரி வெட்கிச்செல்கிருன் வஞ்சிபத்தன் போகிருன்.

சீன் :—17] [இடம்:—வெட்டுப்பாரை.

கொலைஞரிடமிருக்கும் வாளை கோவலன் வாங்கிக்கொண்டு.

கோ-வ-ம்:—பாதகன்! சண்டாளன்! இப்பொழுது அந்த துரோகியான வஞ்சகப் பத்தனுக்கு என்ன நன்மையுண்டாகி விட்டது. அடே! துரோகி! என்னைக் கொன்றதனுல் நீ யடைந்த பயனென்ன? ஆ! ஜெகதீசா!

பாராயோ எந்தன் முகம் என்ற மெட்டில் பின்னடிவேறு.

பாவியிலும் பாவி மகா படுபாவி வஞ்சிபத்தன்
பாரிலுள்ளோர் களையே ஏமாற்றும் கொடியசித்தன்

பாவியவன் உலகுதனில் வாழ்வானே
பகரொணுத கோரத்திலுல் மாள்வானே (பா)

சிலம்பதனை விற்றெனக்கு தருவேனென அழைத்துச் சென்றுன்
திருடனென குற்றம்சாற்றி தீவினையாக முடித்தான் (பா)

கோ-வ-ம்:—ஆ! பராத்பரா! பாதகனுகிய யான் முன் ஜென்மத்தில் செய்த பழி பாவங்களெல்லாம் ஒருங்கு சேர்ந்து இச்ஜென்மத்தில் இத்தீவினைக்குள்ளாக் கினைப்போலும்.

கோவலன் விருத்தம்.

வாழையடி வாழையென வந்ததிருக்கூட்டம் மரபினில்
யாளெருவ னன்றோ வகையரியேன் இந்த
ஏழைபடும் பாடுனக்கு திருவுளச் சம்மதமோ
இதுதகுமோ இதுமுறையோ இதுவுனக்கு தருமந்தானே
மாழைமணி பொதுநடனஞ் செய் வள்ளல் யானுனக்கு
மகனலனே நீயெனக்கு வாய்த்த தந்தையலவோ
கோழையுல குயிர்த்துயர பிணிபொருக்க மாட்டேன்
கொடுத் தருளும் நின்னடியை கொடுத்தருளும்
நடனமணியே நவமணியே நடன சிகாமணியே
நாட்டிய மணியே நடராஜ மணியே.

கோ-வ-ம்:—ஏ! ஜெகதீசா, பக்தர் முக்தர்களும் நாளும் தேடிக் காணாத பரமனே! இம்மதுரையம்பதியில் அறுபத்திநான்கு திருவிளையாடல் புரிந்த அமரேசனே! அம்பிகையை இடபாகத்திலமர்த்திய அம்பலவாணா! கங்கையை ஜடையில் வைத்து கரத்தில் மான் மழுவேந்தி காளிகாதேவியுடன் காலைத்தூக்கி நிர்த்தனித்த கங்காதரா! இக்கசடனாகிய யான உனக்குச்செய்த குறைகளனைத்தும் ஒருங்கு சேர்த்து இக்கதிக்காளாக்க நினைந்தனைபோலும்? யான் மடிவதைப்பற்றி சிந்திக்கவில்லை, எனது கூத்தியாகிய தாசிமாதவி, யான் பத்துலக்ஷம் பொன்கொண்டு வருவேனென எதிர்பார்த்த வண்ணமாய் இருப்பாளே, அவளுக்கு துரோகம் புரிந்த பாவியானேன். தவிரவும், மனையோடிருந்த மாதரசியாகிய எனது கர்னகையை என்னுடன் அழைத்துவந்து யாருமற்ற அனாதிபோல் ஆதவகுல ஆச்சியின் இல்லத்தில் அடைக்கலமாக வைத்தேன், யானிங்கு இறந்ததை அன்னவளுக்கு யார்போய் உரைக்கப்போகின்றனர். ஆயினும் யான் வைத்த அடையாளங்கள் மாரியிருக்கக்கண்டு ஒருவேளை இங்குவந்து என்மேல் விழுந்து புலம்பி எக்கதி யாவாளோ தெரியவில்லையே? ஏ மாதவி! எனது சொத்துகளனைத்தும் உனக்கேயளித்தும், இறுதியில் இத்தகைய துன்பத்திற் காளாக்கினது நீயல்லவா? உனது பொன்னுக்காக வல்லவோ இத்தகைய கஷ்டத்திற் காளாகினேன்? உனக்குப்பட்ட கடனை நீ பொறுத்துக்கொள்ளலாகாதா? இவ்வளவிற்கும் நீதான் காரணம். ஆயினும், நேரமாகின்றது. ஆ ஜெகதீசா! யான் எத்தகைய பாவியாயிருப்பினும் அதுவனைத்தும் நீக்கி என்னை உனது பாதார விந்தத்திற் சேர்க்கும்படி கேட்டுக் கொள்வதுடன் இக்கொடுங்கோன் மன்னனை நீதான் தண்டிக்க வேண்டியது. ஆ பரமேசா! ஹா கர்னகா! கர்னகா! கர்னகா!

[கோவலன் மடிகிறான் கொலைஞர் ஒடி விடுகிறார்கள்.]

சீன் 18.] **[இடம்:—இடைச்சி வீடு.**

இடை-வ-ம்:—அம்மணி! என்ன ஒருவித முகவாட்டத் துடனிருக்கின்றாய்?

கர்-வ-ம்:—தாயே! ஒன்றுமில்லை. அதாவது, என் நாதனை இவ்வூர் அரசன் பொய்க்குற்றம் சாட்டிக் கொன்றதாக சொற்பனங் கண்டேன். வேறொன்றுமில்லை தாயே!

இடை-வ-ம்:—அப்படியா? அடையாளகளைப் பார்த்தனையா?

கர் வ-ம்:—இதோ பார்க்கின்றேன்.

கர்னகி அடையாளங்களைக்கண்டு கீழேவிழுந்து புலம்புகிருள்.

ஒருரோமமுதிர்ந்தாலும் என்ற மெட்டு.

ஐயையோ என்ன செய்வேன் ஆஹா எங்கனமுய்வேன்
அனியாயமனியாயமே என்நாதா என்நாதா எ ஐ

பெட்டியுடைந்து போச்சே புஷ்பமும் வாடலாச்சே
பேதையான் என்செய்குவேன் என்நாதா என்நாதா எ ஐ

ஜலமும் குறையலாச்சே தீபமணைந்து போச்சே
சேயிழை என்னசெய்வேன் என்நாதா என்நாதா எ ஐ

கர் வ-ம் :—ஹா! நாதா! யான் தங்களை எவ்வளவோ தடுத்தும், அதற்கெல்லாம் மறுப்புகூரி சென்றீரே? அப்பாதகன் உன்னைப் பழிப்போட்டுக் கொன்ருனல்லவா? அம்மணி! என் நாதன் மடிந்தது உண்மையே. ஆதலால், யான் அவரைத் தகனம் செய்து கொன்ற சண்டாளர்களையும் ஒருகை பார்த்துவிட்டு வரவேண்டும்.

இ வ-ம் :—நீ இங்கனே இரு, யான் பார்த்து வருகின்றேன்.

இடைச்சி சென்று கோவலன் மடிந்ததைப் பார்த்துவிட்டு வந்து கர்னகைக்கு தேருதல் சொல்லுகிருள்.

இடை வ-ம் :—அம்மா! ஏன் வீணில் சிந்தனையுருகிருய்? அவர் சிலம்பை விற்று சந்தோஷமாகவே வருகிருர் நீ அஞ்சாதே.

கர் வ-ம் :—அம்மா உண்மைதானு?

இடை வ-ம் :—உண்மைத்தான் தாயே!

கர் வ-ம் :—அடி! பொய்சொல்லாதே உண்மையைச் சொல்?

இடை வ-ம் :—என்ன அம்மணி! யானிதுவரையில் உன்னிடம் ஏதாவது பொய்யுரைத்திருக்கிறேனு?

கர் வ-ம் :—சட்! சண்டாளி!

அத்தரவித்தையினற்றிரு க்ஷத்ரியர் என்ற மெட்டு.

பொய்பேசியெந்தனை போகவொட்டாது நீ
பாவி கொடுத்தாயோடி
அய்யோ யென்றலர ஆஹா உந்தன் வீடு
அனலா எரியு மோடி

கர் வ-ம் :—அடி துஷ்டி! என்னை யாரென்று மதித்தாய்? இப்போதாவது உண்மையைத் தெரிவி.

இடை வ-ம் :—தாயே! அபச்சாரம், குடியிருந்த வீட்டில் கொள்ளிவைக்கலாகுமோ? அப்பாண்டியனுல் உன் நாதன மடிந்தது உண்மையே மன்னிக்கவும்.

கர் வ-ம் :—ஆஹா! அப்படியா? உன்வீடு முன்போலாகக் கடவது. இதோ போகிறேன்.

(கர்னகை போகிருள்.)

சீன்:—19.] [இடம்:—வெட்டுப்பாறை.

கோவலன் வெட்டுண்டு கிடக்கின்ருன் கர்னகி கோவிலனைக் கண்டு புலம்பி கடவுளைத் துதிக்கின்ருள்.

மதினமோரேசையா என்ற மெட்டு.

சோமசுந்திராஉனை துதித்து நின்றேன்—மனம்
கொதித்து நின்றேன் பதம் பதித்து நின்றேன் சோ

தாமதமேனே சரியிதுதானே
வாமனன்மைத்துனனே வஞ்சமேனே—உந்தன்
தஞ்சம்யானே மனம் கெஞ்சினேனே சோ

நாதனை எழுப்பவேணும் நான்சேதியரியவேணும்
நயந்துஅனுப்பிடுவீர் உயிரதையே—கார்த்
திடுவீர்நீயே கால காலாநீயே சோ

கோவலன் எழுந்திருக்கின்ருன் கர்னகி மரைந்துக் கோள்கிருள்.

இராகம்-தேசிகசுருட்டி, தாளம்-ஆதி.

கோ. மாதவியோ கர்னகையோ மாதவள் யாரடி
மாதவியானுல் மடிமேல்வா கர்னகையானுல் செல் செல் செல்

கர். கஜமே கொண்டேன் கர்னகையாள்
ஏறிக்கொண்டாள் மாதவியாள்
கஜங்கொண்டாள்யா னிங்குவந்தேன்
ஏறிக்கொண்டவள் ஏன்வருவாள்

கோ. தாசியரோ தையலரோ வந்தவள் யாரடி
தாசியரானுல் மடிமேல்வா தையலரானுல் விலகிப்போ

கர். கழுத்தை கொடுத்தேன் கர்னகை யான்
கட்டியணைந்தாள் மாதவியாள்
கழுத்தை கொடுத்தாள் இங்கு வந்தேன்
கட்டியணைந்தவள் ஏன்வருவாள்

கர்-வ-ம்:—(எதிரில் வந்து) நாதா! இத்தனை கஷ்டங்களுக்குள்ளாகியும், அந்த சண்டாள மாதவியினுசை மறக்கவில்லையோ தும்?

கோ-வ-ம்:—கர்னகா! ஏனிங்கு வந்தாய்?

கர்-வ-ம்:—நாதா! அதிருக்கட்டும்.

சேவலாளி தேவராஜன் சேவைதா என்ற மெட்டு.

கற்பாறைமீது வெட்டிய காதகர்கள் யாரையா
கர்னகையானிங்கு வந்தேன் காரணத்தை கூரையா
தற்பரனருளாலவர் தன்னை யுரைப்பீரையா
தத்துவமுடன் குடலை தான் பிடுங்குவேனையா

கோ வ-ம்:—கண்மணி! வேறொன்று மில்லை. யான் சிலம்பு விற்றுவருங்கால், அச்சண்டாள வஞ்சகப்பத்தன் அதை விற்றுத் தருவதாக அரசனிடம் அழைத்துச்சென்று, என்மீது ஏதேதோ பொய் குற்றங்களைச் சாற்றினன். அதையறிந்த அத்தன்மார்க்கப் பாண்டியன், கொஞ்சமும் முன்பின் பாராது, எனை வதைத்தெரியும்படி கட்டளையிட்டான். அதில் நன்மந்திரியார் மாத்திரம் எவ்வளவோ எனக்காக எடுத்துப் பேசியும் எடுபடவில்லை.

கர் வ-ம்:—நாதா! தங்களுக்கு குற்றம் செய்தவர்கள் பெயரையும், அவர்களை என்னச் செய்வது என்பதையும் தெரிவியுங்கள்?

கோவலன் விருத்தம். இராகம்—மோகனம்.

கண்மணி வஞ்சிபத்தன் காதகன் பாண்டியன்தான்
துன்மந்ரி கோவிலிங்கி தொகுத்துமே யென்னைத்தானும்
அன்னமே கொன்றாரிங்கே ஆதலால் நீயேசென்று
தன்மையாய் கொல்வேனென்று தருகுவாய் வரமேபெண்ணே.

கர் வ-ம்:—நாதா! ஏதோ தங்களின் கரத்தை இப்படித் தாரும், ஹா! பிராணகாதலா! ஆதியில் என்னைத் தங்களின் துடைமீதிருத்தி மாங்கனியை கரத்திலதந்து மணமாலை சூட்டினீரே அதுவும் இந்தக்கரம்தானே? அதுவும் தவிர, தாசிமாதவி எறிந்த மாலையைக் கழற்றித்தர முடியாது அவள் தாம்பூலத்தை வாங்கியருந்தியதும் இக்கரந்தானே? அதுவும் போதாமல், அம் மாதவி நமதரண்மனையை விட்டுச் செல்லுங்கால் அன்னவளின்மீது ஆவலுற்று இழுத்தீரே அதுவும் இந்த கரந்தானே? பிறகு, பன்னிரெண்டுகப்பல் நாணயங்களையும் அச்சண்டாள மாதவிக்கு தத்தம் செய்தீரே அதுவும் இங்கரம்தானே? நாதா! அதுவுமல்லாமல் யான் மரணாவஸ்தையிலிருப்பதாக லிகிதம் கண்டு அம்மாதவிக்குப் பதுமை செய்துவைத்து பிறகு பத்துலக்ஷம் பொன்னும் தருவதாக சத்தியம் செய்துவந்தீரே, அதுவும் இக்கரந்தானே? பிறகு வீடுவந்து அச்சண்டாள மாதவியின் கடன் தீர்க்கும்பொருட்டு என் பாதச் சிலம்பைக்கேட்டு அன்னவளின் கடனைத் தீர்க்க ஆவ

ளுடன் வாங்கினீரே அதுவும் இக்கரந்தானே? பிறகு யானும் தங்களுடன் வருவேனென உரைக்க என்னையும் தங்களுடன் அழைத்துவந்து அந்த ஆதவகுல ஆச்சியம்மாளிடத்தில் என் கரத்தைப் பிடித்து அடைக்கலமாக வைத்தீரே அதுவும் இக்கரந் தானே? அதுவுமல்லாமல் என் பாதச்சிலம்பைத் தங்களின் சிரசின் மீது வைத்து சிலம்போசிலம்பு என விலை கூறி வந்தபோது அச் சிலம்பிற்கு ஆதாரமாக நின்றது மிக்கரந்தானே? பிறகு அச்சண் டாள வஞ்சிபத்தன் சிலம்பை விற்றுத்தருவதாக உரைத்ததை மெய்யென நம்பி அவன் கரத்தில் சிலம்பைக் கொடுத்தீரே அது வும் இக்கரந்தானே? பிறகு அவனுடன் ராஜசபைக்குச் சென்றதும் உன்னைத் திருடனென நேமித்த அப்பாதக பாண்டியன் தெரிவித்த சத்தியங்களுக்கெல்லாம், ஏ கர்னகா! நீதான் காப்பாற்றவேண்டும் என்று கையெடுத்துக் கதரினீரே அதுவும் இக்கரந்தானே? அக் கொடுங்கோன் மன்னனாகிய கொடும்பாவி பாண்டியனலிடப்பட்ட தண்டனைக்கும் சம்மதித்து, அக்காளிகோவில் வெட்டுப்பாரைமீது நின்று ஒருவரால் நம்முயிரை மாய்க்கப்படாதென நினைத்து தானே வாளினால் பிளந்துகொண்டீரே அதுவும் இக்கரந்தானே? அதே இக்கரத்தில் இதோ யான் செய்யும் சத்தியமாக தங்களின்,

அப்படியே செய்துவருவேன் என்ற மெட்டு.

சொற்படியே செய்துவருவேன் எந்தன்
சுந்திரரே இந்தவேளை விந்தையுடன் சென்றவரை சொ

அற்ப வஞ்சிபத்தனையும் அரசன் பாண்டியனையும்
ஆரணங்காள் சென்று இதோ ஆஹா அதம்புரிந்து சொ

கர் வ-ம்:—நாதா! சற்று அமருங்கள் ஒன்று தெரிவிக்கின்றேன்

கர்னகி கோவலனை மடித்துவிட்டு பாண்டியனிடம் வருகிறான்.

சீன்:—20.] [இடம்:—கோட்டை வாயர்படி.

பாண்டியன் கதவை மூடிக்கொண்டு உள்ளே இருக்கிறான்
வாயிற்படி வெளியில் காவலர் இருக்கும் சமயம்
கர்னகை காளிரூபத்துடன் வருகிறாள்.

ஸ்ரீராமசந்திரனே என்ற மெட்டு.

கோட்டைக்கதவதனை பூட்டி இருக்குதிதோ
எட்டியுதைக்குறேன் பார் பார் பார்
கொல்கிறேன் அவரை கொல்கிறேன் கோ

நாதனை கொன்ற பழிக்கு பழி
அதற்கு பதிலாக வாங்குவேன் பழி இந்த கோ

காளி காவலிருந்த காவலர்களை துரத்திவிட்டு கதவை உடைத்து உள்ளே செல்ல பாண்டியன் மந்திரிகளுடன் அமர்ந்திருக்கிறன்

காளி கண்ணி.

தேகத்தினில்வலி மேவிச்சமர்புரி என்ற மெட்டு.

பழிக்குப் பழிவாங்க பாண்டியனே வந்தேன்
பத்தாவை ஏனோநீ கொன்றாயடா பெரும்
இழிவான குற்றத்தை ஏனோசாற்றிக் கொன்றாய்
ஏந்திழையாளுக்குச் சொல்வாயோடா
மாளிகை மீதேரி மன்னவர் குதிக்க
மடையனே நீகண்ணால் கண்டாயோடா உன்—
மாதுடனே அவர் மஞ்சத்திலுறங்க
மனமார கண்டுநீ கொன்றாயோடா

காளி-வ-ம்:—அடே! மனுநீதிதவரிய பாண்டியா! நீதானா அரசன்? நீதானா குடிப்படைகளை சோர்வடையாது ரக்ஷிக்கும் மன்னன்? அடே சண்டாளா! நீதியென்பதும் அநீதி யென்பது மரியாமல் அரசுபுரிவது உன்போன்ற அரசர்க்கு அழகுதானா? அடே! என் நாதனை ஏன் கொன்றாய்?

பாண்-வ-ம்:—நீயார், இங்கு எதற்காக வந்தாய்?

காளி-வ-ம்:—அடே! துன்மதிபூண்ட துரோகி! என்னை யாரென்று கேட்கின்றாய்? நீ பொய்குற்றம் சாற்றி யாரைக் கொன்றனையோ அத்திருடனின் மனைவி இப்போது பழிக்குப் பழிவாங்க வந்திருக்கின்றேன். என்ன தெரிவிக்கின்றாய்?

பாண்-வ-ம்:—உன் நாதன் என் சிலம்பை திருடியதால் கொன்றேன்.

காளி-வ-ம்:—அடே! உன் சிலம்பென்று உனக்கு தெரியுமா?

பாண்-வ-ம்:—ஆஹா! தெரியும் அப்படி என் சிலம்பு இருக்குமிடம் உனக்கு தெரிந்தால் எதோ வரவழை பார்க்கலாம்?

காளி-வ-ம்:—சட் மடையனே! இதோ வரவழைக்கின்றேன் பார்.

இராகம்-காம்போதி, தாளம்-ஆதி.

கொண்டுவா கொண்டுவா கருடா சிலம்பை நீ
கொண்டுவா கொண்டுவா கருடா மன்னவன் முன்னே
கொண்டுவா கொண்டுவா கருடா
அண்டமெல்லாம் புகழ ஆஹா உனது பழி
ஆரணங்காள்வாங்கித்தாரேன் அரசன்முன்பாக இப்போ கொ

(சிலம்பை கருடன் கொண்டுவந்து தர அதைக் கர்னகி கரத்தில் வாங்கிக்கொண்டு.)

காளி-வ-ம்:—அடே! இச்சிலம்பு யாருடையது பார்த்தனையா?
பாண்-வ-ம்:—என் சிலம்புதான் ஏன் கருடனிடம் சிக்கியது?

காளி பாண்டியனின் சிலம்பு கருடனிடம் சிக்கிய விபரத்தை யுரைக்கின்றாள் அதற்கு பாண்டியன் திகைத்து.

பாண்-வ-ம்:—எதோ உன் சிலம்பை வரவழைப் பார்க்கலாம்.
காளி-வ-ம்:—இதோ வரவழைக்கின்றேன் பார்?

(சிலம்பு வருகிறது.)

இராகம்-எதுகுலகாம்போதி, தாளம்-ரூபகம்.

அடி-கூடப் பிறக்கலையோ நீ கூட்டுப்பாலுண்ணலையோ-இந்த
நாடு அரியலையோ நாத னோடே வருகலையோ
பகையாளி யல்லவோடி இந்த பாண்டியன் பாவியடி-இவன்
குண்மான் பெட்டியிலே அமர லாகுமோ வாருமடி (கூ)

(சிலம்பு வருகிறது.)

டை மெட்டு.

மாங்கல்ய மருக்கச்செய்த அடி மாபாவி செஞ்சிலம்பே-இந்த
மாது அழைத்தேனென்று கிட்டே வராதே நீதூரேநில்லு
புஷ்பமிழக்கசெய்த படு பாவியே பொற்சிலம்பே-மன்னன்
பேழைதனிலிருந்து அடி வந்தாயோ தூரநில்லு
என்—நாதனைக்கொன்றாயடி நடுத் தெருவில் விடுத்தாயோடி-இப்
பாதகன் பெட்டியிலே பக்ஷமாய் அமர்ந்தாயோடி (மங்)

காளி-வ-ம்:—அடே! இப்போதென்ன தெரிவிக்கின்றாய்?

பாண்-வ-ம்:—தாயே! தெரியாமல் செய்ததை மன்னிக்கவேண்டும்.

காளி-வ-ம்:—சட் சண்டாளர்களே! மன்னிப்பதா முப்பழி, பிற்பழி, இப்பழி ஆக மூன்றுபழி தா?

பாண்-வ-ம்:—என்ன? மூன்றுபழியா? ஏது?

காளி-வ-ம்:—அப்படிக்கேள் தெரிவிக்கின்றேன். முதலாவது பிராமணனைக் கொன்றபழி, இரண்டாவது வணிகனைக் கொன்ற பழி, மூன்றாவது என் நாதனைக் கொன்றபழி ஏதோ தா சீக்கிரம்.

[என்று ஆவேசமாய் வஞ்சிபத்தனிடம் செல்கிறாள்.]

வஞ்-வ-ம்:—தாயே! நானில்லா அம்மணி! எனக்கு ஒன்றுமே தெரியாது. (துன்மந்திரியைக்காட்டி) அதோ நிற்கின்றான் பாருங்கள் தாயே! அவன்தான் உன் நாதன் மீது பழிபோட்டுக் கொன்றவன். பாவம், அவர் யாற்பெற்ற பிள்ளையோ தெரியவில்லை. இச் சண்டாளன் அவர்மீது அவ்வளவு அருவருப்புடன் குற்றம் சாற்றி

கொன்றுனம்மணி! அவன் நிற்பதை பாருங்கள் எள்ளு குத்தும் உலக்கையைப்போல நிற்கின்றான்.

காளி-வ-ம்:—ஏ நன்மந்திரியாரே! இப்போதே எங்கேனும் சென்று பிழைக்க வழிதேடிக் கொள்ளுங்கள்.

பொது-வ-ம்:—(நன்மந்திரி போய்விடுகிறார்) கர்னகி பாண்டியர் முதலானோர்களின் குடலைப் பிடுங்கி மாலையாகப் போட்டுக் கொண்டு பிறகு மதுரையைக் கொளுத்திவிட்டு கொலை களத்திற்குச் செல்கிறாள்.

சீன்:—21] [இடம்:—வெட்டுப்பாரை.

காளி-வ-ம்:—ஆ! இப்போது தான் எனது ஆதிபழி தீர்ந்தது சண்டாளப் பாண்டியனும் மடிந்தான் (இதற்குள் குடிகள் வருகின்றனர்) ஏ! குடிகளே! யாதொன்றும் அஞ்சாதீர், இச்சண்டாளப் பாண்டியன் இன்றோடு ஒழிந்தான், இனி குலசேகரப் பாண்டியன் இவ்வூரை அரசு புரிவான் அஞ்சாதீர் செல்லுங்கள்.

இதற்குள் மாதவி வருகிறாள்.

காளி-வ-ம்: —ஏ! மாதவி! முன் பிறப்பில் உன் கணவன் மாண்டதற்காக நீ, விடுத்தாய் உயிர் இப்பிறப்பில் உனக்கு தரவேண்டிய பத்துலக்ஷம் பொன்னுக்காக உன் நாதன் உயிர் விடுத்தான், நீ இப்போது உன் நாதனுடனே உடன் கட்டை ஏறுகின்றனையா அல்லது உன் ஊருக்குச் செல்கின்றனையா?

மா-வ-ம்:—என் கணவனுடனேயே உடன் கட்டை ஏறுகிறேன் தாயே!

பிறகு இவர்களை தர்கித்து விட்டு திருவொற்றியூருக்கு சென்று வட்டபுரியம்மனென் சுகமுட னிருக்கின்றாள்.

வாழி விருத்தம்.

ஆலகா லத்தையுண்ட ஆதிசிவ னாரும்வாழி
தாலமேல் மேன்மையுற்ற தமிழ்வித்வ மாகளர்வாழி
சாலவே அச்சிட்டநண்பர் மதுரைமுதலியார் வாழி
நாலாமரை புகழும் நண்பன்தியாக ராஜன்வாழி.

சுபம்! சுபம்!! சுபம்!!!

கோவலன் டிராமா
முற்றிற்று.

172340

V. A. தியாகராஜ செட்டியாராலியற்றிய, மதியால் விதியை விலக்கிய மார்க்கண்டேயர் சரித்திரம் அவசியம் பார்க்கவும்.

"அமிர்த குணபோதினி" பிரஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

K. A. மதுரை முதலியாரவர்கள் பதிப்பித்துள்ள

12. டிராமா சரித்திரங்கள்.

பற்பல டிராமா கம்பெனிகளில் நடித்து காட்டிவரும் நூதன டிராமாக்கள் 12-சேர்த்து ஒரே பயிண்டாக செய்து தயாராகயிருக்கிறது வேண்டியவர்கள் உடனே நேரிலும் வி. பி. மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

1. கோவலன் டிராமா.
2. சாவித்திரி சரித்திரம்.
3. அல்லி அர்ஜுனா.
4. அரிச்சந்திரா.
5. அதிரூப அமராவதி.
6. சக்குபாய் சரித்திரம்.
7. பாரிஜாத புஷ்பஹரணம்.
8. தூக்குத் தூக்கி.
9. பிரகலாதன் சரித்திரம்.
10. ஞானசவுந்தரி.
11. ராமதாஸ் சரித்திரம்.
12. கபீர்தாஸ் சரித்திரம்.

இவ்வரிய டிராமாக்கள் 12-ம் ஒருங்குசேர்த்து அழகிய தாளில் கலிகோபயிண்ட் செய்து தயாராகவிருக்கின்றது. தேவையுள்ளவர்கள் உடனே ஆர்டருக்கு எழுதுக. விலை ரூபா 2 0 0.

இதர டிராமா தினுசுகள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
பகவத்கீதை டிராமா	0	4	பாதுகா பட்டாபிஷேகம்	0	4
குலேபகாவலி சரித்திரம் 1-2 பாக	0	6	பவளக்கொடி 1-2 பாகம்	0	6
சிறுத்தொண்டன் டிராமா	0	6	தாராசசாங்கம் டிராமா	0	4
துளசிதாசர் டிராமா	0	4	5 டிராமா செள செள டிராமா	0	4
டம்பாச்சாரி டிராமா 1-2 பாகம்	0	6	கிருஷ்ணலீலா அல்லது கோபாலகலா	0	6
நந்தனார் சரித்திரம்	0	2	வள்ளி திருமணம் சுந்தராம்பாள் வேடன்பினாக் அமைந்தது	0	4
துரௌபதை வஸ்திராபஹரணம்	0	4	ருக்மாங்கதன் சரித்திரம்	0	4
மார்கண்டய்யர் டிராமா	0	4	கண்டிராஜா	0	4
வள்ளி திருமணம் சுப்பய்ய பாகவதர் பாடியது	0	4			

இன்னும் உங்களுக்கு தேவையான டிராமா புத்தகங்களுக்கு கீழ்குறித்துள்ள விலாசத்திற்கு எழுதவும். 1-8-0-க்கு குறைந்த ஆர்டர்களை வி. பி.யில் அனுப்ப முடியாது. தனி டிராமா எதுவேண்டுமானாலும் அதன் கிரயத்திற்கு ஸ்டாம்பு வாங்கி கவரில் அனுப்பினால் உடனே அனுப்பப்படும்.

60- நாளில் உபாத்தியாயரில்லாமல் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடிய ஆங்கில ஆசான் விலை ரூ. 2. ஷை தெலுங்கு விலை ரூ. 2.

ஷண்முகானந்த புத்தகசாலை, பார்க் டவுன், சென்னை.

K. A. மதுரை முதலியார் பதிப்பித்ததாக பார்த்து வாங்கவும்.

அநேகர் வேண்டுகோளின்படி 64-படங்களுடன் வெளியிடப்பட்டது.

காமநூல் தேவை தேவை என்று எழுதிக்கொண்டிருப்பவருக்கு உண்மையான 64-லீலா விநோத படங்களுடன் கூடிய கொக்கோக நூல்

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

கொக்கோகம்.

முன் விலை ரூபா 2 0 0 தற்சமயம் ரூபா 1 0 0.

அமிர்தநிலை சக்கரங்களுடன் கூடிய திருத்தமான 2-ம் பதிப்பு.

ஆதியில் அதிவீரராமபாண்டியன் அருளியது.

இதில் காம உற்பத்தி, காதலர் பெருமை, ஆண் பெண் ஜன்மேந்திரியங்கள், பெண்கள் தேக அமைப்பு, அவைகளின் லக்ஷணங்கள், மாதவிடாய் மர்மம், அமுர்தநிலை, படுக்கையறை நுட்பங்கள், இன்பத்தின்லட்சியம், இன்பகாலத்தில் நிகழுவதென்ன, சம்போகத்திற்கு தயாராகுதல், இன்பமனுபவிக்க வேண்டிய நிலைமை, இதில் காம இச்சை, காமத்தால் ஏற்படும் தீமைகள், சம்போகம் செய்யவேண்டிய கிரமம், எங்கும் காணாத சிற்றின்ப மர்மங்களும் சரச சல்லாப நுட்பங்களும், உண்மையாக இன்பத்தை அடையவேண்டிய மர்மங்களும், இன்னும் இதைப்போன்ற நூற்றுக்கணக்கான விஷயங்கள் இதில் காணலாம். மற்றப் போலிப் புத்தகங்கள் போல் அல்ல. இதில் 64-லீலா விநோதப் படங்களுடன் அழகிய தாளில் கலிகோ பயிண்டு செய்து தயாராக இருக்கிறது. விலை ரூ. 2.

தற்சமயம் வாங்குகிறவர்களுக்கு விலை ரூபா 1.

சங்கீத ஞானம் அடைவதற்கு முதன்மையான நூல்.

50 புஸ்தகம் சேர்ந்த பஜனாமிர்த களஞ்சியம்

தென்னாடெங்கும் பிரக்யாதியுள்ள K,B. சுந்தராம்பாள் S.G. கிட்டப்பா S. V. சுப்பய்ய பாகவதர் T. M. காதர் பாட்சா V. S. சுந்தரேசய்யர் S. S. விஸ்வநாத தாஸ் இதைப்போன்ற சங்கீத வித்வான்கள் நாடகமேடையிலும் பிரசங்கவாயிலாகவும் பாடிய இனிய இன்பரசமான பாடல்கள் இதில் காணலாம். அரிபஜனை சிவபஜனை சுப்பிரமணிய பஜனைகளும் இதைப்போன்ற 50-புஸ்தகம் சேர்ந்து ஒரே பயிண்டாக இருக்கிறது.

கலிகோ பைண்டு விலை ரூபா 1—8—0.

அவுட்டுச் சிரிப்பு.

கனவான்களே! அவுட்டு கிளம்புதுபோலத் தொந்தி குலுங்கச்சிரித்து ஆனந்தமாகப் பொழுது போக்கவேண்டுமானால் திடீர்புளுகன், கதையை வரவழைத்துப் பாருங்கள். இதன் விலை அணா. 6.

ஷண்முகானந்த புத்தகசாலை, பார்க் டவுன், சென்னை.

"அமிர்த குணபோதினி" பிரஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை.